

# திருக்கோயில்

ஜனவரி 1993 விலை ரூ 3





மயிலை அருள்மிகு மாதவப் பெருமாள் ஆலய மகா சம்ப்ரோட்சண வைபவத்தில் நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு துரை. சுந்தரேசன், ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். துணை ஆணையாளர் திருமிகு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல், அவர்கள் உடன் உள்ளார்கள்.



முகப்பு:
அருள்மிகு நடராஜர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,P.hD.

| மாலை. 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆங்கீரச ஆண்டு தை ஜனவரி 1993 விலை ரூ. 3-00 | மணி: 1 |
|---|---|---|

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

## பொருளடக்கம்

வீரத்துறவி விவேகானந்தர்
— மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள்
அருளாளர்களின் அருள் அனுபவம்
— திருபந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.
மெய்ப்பொருள் நாயனார்
— பேராசிரியை திருமதி சுமதி குமாரசுவாமி
மீனாட்சி திருவருள்
— புலவர் பாலம்மாள்
திருக்குறுக்கை வீரட்டானம்
— தி. இராசமாணிக்கம்.
திருமுறை அருச்சனை
— மா.வெ.மு. நாகராஜ குருக்கள்.
சித்திரபாரதம்
— செவ்வேள்
அறுமுகசிவம்
— டாக்டர் ப. ராமன்
சோழர் காலத்தில் சமய இலக்கியங்களின் வளர்ச்சி.
— டாக்டர் பொற்கோ.
ஆடல் காண்ரோ! திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்
கீதைக்குறள்கள்
— அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்
மார்கழி நீராடேலோர் எம்பாவாய்
— டாக்டர் த. அமிர்தலிங்கம்.

## நல்வாழ்த்துக்கள்

திருக்கோயில் இதழ் வாசகர்களுக்கு 1993-ம் வருட புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வீரத்துறவி விவேகானந்தர்

மாண்புமிகு தமிழக முதல்வர்

**டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள்



**[கன்னியாகுமரியில் 28.12.92 அன்று சுவாமி விவேகானந்தர் பாதயாத்திரை நூற்றாண்டும், தேசிய விழிப்புணர்வு தொடக்க விழாவும் கொண்டாடப்பெற்றது. மேதகு பாரதப் பிரதமர் திருமிகு நரசிம்மராவ் அவர்கள் கலந்துகொண்ட இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய சிறப்புரை திருக்கோயில் இதழ் வாசகர்களுக்காக அன்புடன் வெளியிடப் பெறுகிறது.]**

சுவாமி விவேகானந்தர் என்னும் ஞான சூரியன், இந்தியாவின் கிழக்குத் திசையிலிருந்து தெற்கு நோக்கி பாதயாத்திரை வந்து, இருட்டில் சிக்கித் தவித்த பாரதத்திற்கு, ஞான வழி காட்டிய புனித நிகழ்ச்சியின் நினைவாகக் கொண்டாடப்படும் தேசிய விழிப்புணர்வு ஆண்டு தொடக்க விழாவில் கலந்து கொள்ள, வாய்ப்பளித்த விழாக்குழுவினருக்கு என் இதயம் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

வேதாந்தியாக, வீரத்துறவியாக, சமரச மெய்ஞானியாக, தேசபற்றாளராக, போராட்ட வீரராக, ஏழைப்பங்காளராக-இப்படி எத்தனை எத்தனையோ பரிமாணங்களைக் கொண்ட அபூர்வ பிறவி சுவாமி விவேகானந்தர்.

அன்று கல்கத்தாவில் அவர் தொடங்கிய பாதயாத்திரை, இந்தக் கன்னியாகுமரியில் தான் முடிவடைந்தது. அந்தப் பாதயாத்திரையின் நூற்றாண்டு விழா, இன்று இங்கே சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படுகிறது.

இங்கு மூன்று கடல்கள் மட்டும் சந்திக்கவில்லை. உலக நாடுகளிலே வாழ்ந்துவரும் பல்வேறு இன மதம் தழுவிய மக்கள், தோளோடு தோள் சேர்ந்து நிற்கும் காட்சியையும் இங்கே நாம் காணலாம். இது உலக ஒருமைப்பாட்டை அனைவருக்கும் உணர்த்தும் ஒப்பற்ற மண்.

அண்மைக் காலமாக நாட்டில் நாம் காணும் ரணங்கள், மேகமூட்டங்களைப் போல இந்த உண்மையை மறைக்கலாம். ஆனால், இருளைக்கிழித்து வரும் முழுமதியைப் போல, சமயச்சார்பற்ற இந்தியா வெளிப்படும் என்டதை, உலகிற்குச் சொல்லுகிற நல்ல நிகழ்ச்சியாக, இந்த நிகழ்ச்சி நமக்கு அமைந்துள்ளது.

இந்தியா தேசம் பெரியது. இது ஞானத்தின் களஞ்சியம், ஆன்மீகத்தின் விளை நிலம் என்பதுதான் சுவாமி விவேகானந்தரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த உண்மை தெரியாதவர்களுள்ளேதான் குழப்பம்; இந்த

நம்பிக்கையில் எழுந்ததுதான் அவரது நாட்டுப்பற்று. உன்னத இமயம் போல், ஓங்கி நிற்கும் அவரது நாட்டுப்பற்றுதான், கோடானு கோடி பாரத வீரர்களை உருவாக்கியது என்பதை எண்ணிப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன்.

அன்று சிகாகோவிலே, சிங்கமென அவர் கர்ஜித்தபோது இந்தியாவின் ஆத்மாவின் முழக்கமாக, அது எட்டுத்திசைகளிலும் கேட்டது. அவருடைய நாட்டுப்பற்று, குறுகிய மனப்பான்மைகளுக்கும் வகுப்பு வாதங்களுக்கும், அப்பாற்பட்டு விளங்கியது என்பது நடுநிலையாளர்களுக்கு நன்றாகவே தெரியும். தனி ஒரு மனிதனோ அல்லது ஒரு நாடோ, மற்ற சமூகத்தினரிடம் இருந்து, விலகி நின்று வாழ முடியாது என்று மனித சமூகம் முழுவதற்கும் அவர் உரத்த குரலில் எடுத்துக்கூறியவர்.

'இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், உன் கடமை ஏழ்மையையும் அறியாமையையும் ஒழிப்பதே' என்று எடுத்துக் கூறியவர் அவர்.

அந்த மகத்தான இந்தியரின், மனிதாபிமானியின் மாமனிதரின் இதயத்தைக் கவர்ந்த மாநிலம், தமிழகம். அவர் அமெரிக்கா செல்வதற்கான ஊக்கம் வழங்கப்பட்ட இடம், தமிழகம்.

அதற்கு உதவிய பெருமகனார், ராமநாதபுரம் ராஜா என்பதையும், சிகாகோவில் வெற்றிக்கொடி நாட்டி அவர் திரும்பியபோது அவரை வரவேற்றுச் சிறப்பித்தவரும் அவர்தான் என்பதையும், இன்று எண்ணிப் பார்க்கும் போதும் நான் பூரித்துப் போகிறேன்.

விவேகானந்தரின் சிறப்பை, முதலில் முழுவதும் உணர்ந்தது தமிழகம்தான் என்பதையும் எண்ணிப் பார்த்து, நான் பெருமைப்படுகிறேன், பெருமிதம் கொள்கிறேன்.

எந்தச் சீர்திருத்தக் கருத்துக்கும். எந்த ஒப்புரவு மனப்பான்மைக்கும், உற்ற இடம் தமிழகம்தான். மதமாச்சரியங்களும், ஜாதிப் பிணக்குகளும், வகுப்புக் கலவரங்களும், இல்லாத சமரச பூமி தமிழகம். இது அமைதிப் பூஞ்சோலை.

விவேகானந்தரின் பாதயாத்திரை முடிந்த இந்த இடத்தில், நமது இலட்சிய யாத்திரை-இந்திய தேசத்தின் யாத்திரை-நவ பாரதத்தின் யாத்திரை-இன்று தொடங்க வேண்டும்.

மூன்று நாட்கள் விவேகானந்தர் தவமிருந்த தமிழகத்திலுள்ள இந்தப் பாறை, ஒருநினைவுச்



சின்னம் மட்டுமல்ல. இன்றும் நமக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கும், ஒரு ஆன்மீகக் கலங்கரை விளக்கம்.

சமயச்சார்பற்ற பாரதம் என்னும் தத்துவத்தை நிலை நாட்ட, ஒன்றுபட்ட ஒரே இந்தியா என்பதை உறுதிப்படுத்த, தமிழக மண்தான் ஏற்றது என்பது வரலாறு உணர்த்துகின்ற போதனை.

அமைதி நிறைந்த ஆன்மிகச் சிறப்புமிக்க சகல சமயங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கிற, ஒப்பற்ற பாரதத்தை உருவாக்க வேண்டும் என்றுதான், சுவாமி விவேகானந்தர் இங்கே தவமிருந்தார். இங்கே இருக்கிற அன்னை கன்னியாகுமரி, நித்தம் தவம் செய்வதும் அதற்காகத்தான்.

உங்கள் அன்புச் சகோதரியாகிய என் நெஞ்சத் தவமும், தங்கத் தமிழ் மக்களது அன்புத் தவமும், அதுதான். விவேகானந்தரின் பாத யாத்திரை முடிவடைந்த இந்த இடத்தில் இந்தியாவின் ஒற்றுமை யாத்திரையை, நவ பாரதத்தின் லட்சிய யாத்திரையைத்தொடங்கி நாம் வெற்றி வாகை சூட வேண்டும், என்ற என் விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.



# அருளாளர்களின் அருள் அனுபவம்

திருமந்திரச்செம்மல்

**டி.வி.வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்**

*திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்*



**(19)**


என்னுடைய சொந்த ஊர் ஒரு சிறு கிராமம். அந்தக் கிராமத்தின் நடுவில் ஓர் அழகிய குளம் இருந்தது. அந்தக் குளத்தில் எப்பொழுதும் நீர் நிரம்பி நிற்கும். தாமரை மலர்கள் பூக்கும் தடாகம் அது. அக்குளத்தில் மீன்களும் தவளைகளும் சேர்ந்து வாழ்ந்தன. குளத்தின் கரையில் ஒரு பெரிய அரச மரம் இருந்தது. அந்த அரச மரத்தின் நிழலில் பல ஆண்டுகளாக ஒரு பிள்ளையார் அமர்ந்திருந்தார். குளத்தில் குளிக்க வந்தவர்கள் எல்லோரும் குளித்துவிட்டு அந்தப் பிள்ளையாரை தரிசித்து வலம் வந்து வணங்கிப் போவது வழக்கம். குளத்திற்குச்சற்று தூரத்தில் காவிரிஆறு பரந்த மணற்பரப்பில் ஓடியது.

அந்தக் குளத்தில் பல நாட்களாக ஓர் தவளை தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. குளத்திலுள்ள எல்லா உயிரினங்களையும் நன்கு தெரிந்திருந்தது. குளத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சென்று பார்த்து, எல்லாவற்றையும் நன்கு தெரிந்து கொண்டிருந்தது. வயதான தவளையாதலால் குளத்தில் நேரிடும் பல நிகழ்ச்சிகளையும் நன்கு அறிந்து கொண்டிருந்தது. சொல்லப் போனால் குளத்தைப் பற்றிய எலலா அறிவும் இந்தத் தவளை பெற்றதாக இருந்தது. தானுண்டு, தனது குடும்பம் உண்டு. அந்தக் குளமும் உண்டு என்கிற உணர்வின் அடிப்படையில் அந்தத் தவளை வாழ்ந்து வந்தது. அந்தத் தவளையிடம் போய் 'தவளையே, இந்த மாயையான வாழ்க்கையை இன்னும் எவ்வளவு நாட்கள் வாழ்ந்து காட்டப் போகின்றாய்?'' என்று கேட்டால் அந்தத் தவளைக்குப் புரியுமா?

குளக்கரையில் இருந்த அரச மரத்தில் ஒரு காக்கை ஒரு நல்ல கூட்டை கட்டி வைத்திருந்தது. அந்தக் கூட்டில் காக்கை முட்டையிட்டு, குஞ்சுகளைப் பொரித்து, குஞ்சுகளுக்கு பறக்கும் சக்தி வரும் வரை அவற்றிற்கு உணவைச் சேகரித்துக் கொண்டு போய் கொடுக்கும். ஒரு நாள் அந்தக் கூட்டில் காக்கையின் குஞ்சுகள் இல்லாதபோது ஒரு குயில் தன்னுடைய முட்டையை அங்கே விட்டுச் சென்றது. காக்கை திரும்பி வந்து அந்த முட்டையைப் பார்த்தது. ஆனால், அது குயிலினுடைய முட்டை என்று அடையாளம் கண்டு கொள்ள காக்கைக்கு போதிய அறிவு இல்லை. காக்கையும் அந்தக் குயிலினுடைய முட்டையைஅடைகாத்து குஞ்சு பொரித்தது. குயிற்குஞ்சு முட்டையிலிருந்து வெளிவந்த பிறகுகூட காக்கைக்கு வேற்றுமையை அறிந்து கொள்ள இயலவில்லை. தன்னுடைய குஞ்சைப் போல குயிற்குஞ்சையும் வளர்த்தது. ஏன் என்று கேட்கவில்லை. தனதில்லை என்று உணர்ந்து கொள்ளவில்லை. மயக்கத்தால் காக்கை அக்குயிற்குஞ்சை வளர்த்தது.

''குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லைப் போக்கில்லை யேனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே
(திருமந்திரம்..488)

குளக்கரையில் வீற்றிருந்த பிள்ளையார் ஒரு நாள் அந்தக் குளத்தைப் பற்றி எல்லாம்



அறிந்திருந்த தவளையிடம் பேச்சுக் கொடுத்தார். ''உனக்கு இந்தக் குளத்தைப் பற்றி எல்லாம் தெரியும் அல்லவா?''

''தெரியும் சுவாமி''

''இந்தக் குளத்தைவிட பதின்மடங்கு நீர் பரப்பைக் கொண்ட ஒன்று இருக்கின்றது. அது உனக்குத் தெரியுமா?''

''அது எப்படி இருக்க முடியும்'' சுவாமி. நான் இருக்கும் குளத்தைவிட பெரியதாக ஒன்று இருக்கும் என்று நான் நம்பவில்லை.'' என்று தவளை பதில் கூறியது.

''அப்படி ஒன்று இருக்கின்றது என்பதை நான் காண்பிக்கின்றேன. பார்'' என்று பிள்ளையார் சொல்லி அந்தத் தவளையை தனனுடைய ஆற்றலினால் குளத்தில் இருந்து தூக்கி விண்வழியாக காவிரி ஆற்றைப் பார்க்கச் செய்தார். கடலைப் பார்க்கச் செய்தார். திருப்பி தவளையை கொண்டு வந்து குளத்தி லேயே விட்டுவிட்டார்.

''என்ன இப்போதாவது நம்புகிறாயா?'' என்று பிள்ளையார் கேட்டார். தவளைக்கு நா எழவில்லை. பயத்திலும், வியப்பிலும், ஆச்சரியத்திலும் தவளை மூழ்கி இருந்தது. குளம் குளம்தான். கடல் கடல்தான் என்கிற உணர்வில் தவளையின் எண்ணம் அழுந்தியிருந்தது. கிணற்றைப் பற்றிய அறிவு சிற்றறிவாகும். கடலைப் பற்றிய அறிவு பேரறிவாகும். சிற்றறிவிலே ஈடுபட்டு தன்னைப்பற்றி பெரிதாக நினைத்துக் கொண்டிருந்த தவளை பேரறிவை எதிர்நோக்கியவுடன் அடித்துக் கொண்டு வரும் ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டது போல நின்றது. அதனுடைய சிற்றறிவு பேரறிவில் அடங்கியது. அதற்கான வழியை அந்தப் பிள்ளையாராகிய குருவே தவளைக்குக் காட்டி, பேரறிவின் உண்மை இயல்பை விளக்கினார்.

உயிர்களுடையநிலையும் இப்படியேதான். இறைவனுடைய அருளால் உயிர்கள் ஐம்பூதங்களால் ஆன உடல்களைப் பற்றுகின்றன. இது அவைகளுடைய வினைக்கேற்ப நடைபெறுகிறது. ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்களும் சேருகின்றன. தான் என்கின்ற நினைப்பு உயிர்களிடையே தோன்றுகின்றது. ஐம்புலன்களுடைய சேர்க்கையால் விஷய வாசனைகள் உயிரை வந்து அடைகின்றன. அறிவு பிறக்கின்றது. குழந்தை முதலில் தாயை அறிந்து கொள்கின்றது. பின்னர் தநதையை தெரிந்து கொள்கின்றது. பின்னர் உலகத்தைத் தெரிந்து கொள்கின்றது. மனிதன் வளர வளர அறிவும் வளருகின்றது. இந்த அறிவின் வளர்ச்சி மனிதனை பல சாதனைகள் செய்யத் தூண்டுகின்றது. பிரமிக்கத்தக்க முறையில் விஞ்ஞான சாதனைகள் பெருகுகின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு காணாத விஞ்ஞான அதிசயங்களை இப்பொழுது நாம் கண்டு வியக்கின்றோம். மனிதனால் முடியாத காரியமே இல்லையென்று சொல்லுமளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து வருகின்றது.

ஆனாலும் மனிதன் எவ்வளவு சாதித்தாலும் அவனுக்கு இருப்பது சிற்றறிவுதான். அவன் அறியாதவைகளே அதிகம். 'கற்றது கைம்மண் அளவு; கல்லாதது உலகளவு'. உயிரினுடைய அறிவின் தன்மையைப் பற்றி மேலும் சற்று சிந்திக்க வேண்டும். உயிர் அறிவுத் தன்மையை உடையது. அதே நேரத்தில்

அநாதியானது. ''அறிவு அறிவு என்ற அறிவு அநாதி'' என்பார் திருமூலர். ஆனால், அறிவாகிய உயிர் எப்போதும் ஒன்றைச் சார்ந்தே இருக்கும் இயல்பைக் கொண்டது. இப்போது நமது உயிரானது உடம்பைச் சார்ந்துள்ளது. ஆகவே, நம்முடைய உடம்பின வழியாக கருமங்கள் நிறைவேறுகின்றன. இச்சைகள் செயல்படுகின்றன. செயல்கள் நடந்தேறுகின்றன. இதனால் சிறிதளவு நமக்கு அறிவு விளக்கம் கிடைக்கின்றது. உயிரினுடைய அறிவானது பற்றப் பற்ற பொருள்களில் அழுத்தும் இயல்பு உடையது. பளிங்கின் முன்னால் மாணிக்கத்தை வைத்தால் பளிங்கு மாணிக்கத்தின் நிறத்தைப் பெற்று விளங்குகின்றது. வேறொரு நிறம் கொண்ட கல்லை அதன் முன்பு வைத்தால் அந்தக் கல்லின் நிறத்தினைக் கொண்டு விளங்குகின்றது. ஆகவே, உயிரினுடைய அறிவின் தன்மையானது தான் சார்ந்த பொருளின் தன்மையைப் பின்பற்றி இருக்கும். நாம் கண்களால் பார்க்கின்றோம். ஆனால் இருளில் பார்க்க முடிவதில்லை. கண்ணினுடைய காணும் இயல்பு இருளில் அழுத்தி இருள் மயமாகி விடுகிறது. கண்ணாடிக்கு பிரதிபலிக்கும் தன்மை உண்டு. ஆனால், கண்ணாடி முழுவதிலும் மாசு படிந்திருந்தால் கண்ணாடி பிரதிபலிப்பதில்லை. ஆகாயம் பகலில் சூரியனோடு கூடி இருக்கும் பொழுது ஒளி பெற்று விளங்குகின்றது. இரவு இருளில் தானும் இருள் மயமாக கிடக்கின்றது. அதே போல உயிரின் அறிவும் சார்ந்த பொருளின் தன்மையைப் பெற்றிருக்கும். உமாபதி தேவநாயனார் இதனை ''இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்லாம் பொருள்கள் இலதோ புவி'' என்று திருவருட்பயனில் கூறுகின்றார்.

பொறிகளும், புலன்களும் உடலுக்கு வெளியேயுள்ள பொருள்களை அந்தக்கரணங்களுக்குச் சுட்டிக் காட்டுகின்றன. அந்தக் கரணங்கள் வழியாக உயிரானது வெளிப் பொருள்களைப் பற்றிய அறிவினைப் பெறுகிறது. ஆனால், பொறிகள், அந்தக்கரணங்கள் போன்றவை சடப் பொருள்களாகும். தாமாக மற்றவைகளை அறியும் திறனை அவை பெறவில்லை. அறியும் திறமை உயிரிடம் மட்டுமே உள்ளது. ஆனால், உயிரோ சார்ந்த பொருள்களையே அறிந்து கொள்கிறது. இதன் காரணமாக உயிர் விஷய அறிவிலேயே அழுந்திக் கிடக்கிறது. விஷய அனுபவங்கள் உயிருக்கு இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி தருகின்றன. நல்வினையும், தீவினையும் சேர்ந்து கொண்டு வருகிறது. வினைக் கூட்டங்களின் விளைவாக இறப்பும், பிறப்பும் மாறி மாறி வருகிறது. ஒவ்வொரு பிறப்பிலும் உயிர்கள் எத்தனையோ துன்பங்களை அனுபவிக்கின்றன. ''எல்லா பிறப்பும் பிறந்து இளைத்தேன்'' என்பார் மாணிக்கவாசகர். ஆயினும், போகங்களைத் தவிர்த்து இறைவனைப் பற்ற வேண்டும் என்கின்ற நாட்டம் உடனுக்குடன் ஏற்படுவதில்லை.

இதுவும் இறைவன் அருளன்றோ! 'அருளே எல்லாம்' என்பது சிவஞானசித்தியார் வாக்கு. போகத்தை நுகர்வதற்கான சக்தியையும், சூழ்நிலையையும் கொடுத்து உதவுவதே அந்த அருள்தான். அந்த இறையருள் இன்றி ஒன்றும் நடக்காது. அநாதியே உயிருடன் சேர்ந்து நிற்பது ஆணவமலமாகும். அந்த நிலையில் உயிர்களுடைய அறிவு மறைப்புண்டு கிடக்கின்றது உயிருடன் உடல் சேர்ந்தபொழுது உயிரின் அறிவு விரிவடைகின்றது. எனினும் அந்த அறிவு சிற்றறிவே ஆகும். சிற்றறிவின் மூலமாக நாம் அடைய வேண்டியது முற்றறிவாகும். முற்றறிவு என்பது தன்னைப் பற்றிய தன்னைக்கட்டிநிற்கின்ற பாசங்களைப்பற்றிய, இறைவனைப் பற்றிய உணர்வு நெறியிலுள்ள அறிவாகும். ஐம்புலன்களின் சேர்க்கையில் கிடைக்கும் அறிவு ஆராய்ச்சி அறிவாகும். ஆனால் முற்றறிவானது அனுபவத்தின் அடிப்படையில் கிடைக்கின்றது. அது இறைவனுடைய அருளாலே கிடைக்கின்றது. சிற்றறிவை பயன்படுத்தும் பொழுது உயிரானது அறிவினாலே, ஆராய்ச்சியாலே பார்க்கிறது. 'முகத்தின் கண்கொண்டு பார்க்கும் மூடர்காள்' என்பார் திருமூலர். முற்றறிவினாலே செயல்படும்பொழுது அருளாலே எதையும் பார்க்கும் தன்மை வெளிக்கிளம்புகிறது. 'அகத்தின் கண்களால் காண்பதே ஆனந்தம்' என்பார் திருமூலர். முற்றறிவும் அருளும் ஒன்றே. அருள் தோன்றத் தொடங்கும் பொழுது முற்றறிவு உயிர்களிடத்தில விளங்கத் தொடங்குகின்றது. தாயுமானவர் இந்தக் கருத்தை வெகு அழகாகச் சொல்லுகின்றார் :—

''அருளாலே எவையும்பார் என்றான்-அத்தை
அறியாமலேஎன்றன் அறிவாலே பார்த்தேன்;
இருளான பொருள்கண்ட தல்லால்-கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி''

''அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே'' என்பதும் அப்பர் திருவாக்காகும்.

காரைக்கால் அம்மையார் விஷய அனுபவங்களால் கிடைக்கும் அறிவால் ஆராயும் நிலையைக் கடந்தவர். அருளே உலகுக்குக் காரணமானது என்று அவருக்கு நன்கு தெரியும். அதைவிட முக்கியமானது தான் மெய்ப் பொருளை கண்டுகொண்டது. இறைவனுடைய அருளாலே என்றும் உணர்ந்து கொண்டவர். சிற்றறிவைவிட்டு முற்றறிவைப் பெற்றவர். உயிரின் அறிவுத் திறமை இறைவனைச் சார்ந்துவிட்ட தன் காரணமாக, உயிரின் அறிவு முழுமையும் அருளாக அவர் கண்களுக்குத் தென்படுகின்றது.

''அருளே உலகெலாம் ஆள்விப்ப(து), ஈசன்
அருளே பிறப்பறுப்பது; ஆனால் அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்,
எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவ(து) எனக்கு.''

உயிருக்கு அறியும் திறமை இருந்தும அதைத் தானாக அறிந்து கொள்வதில்லை. 'கண்ணொன்று பல காணும், தனைக் காணா' என்னும் திருமந்திர அடி இந்தக் கருத்தை விளக்குகின்றது. உயிர் குடிபுகுந்துள்ள உடலும், அதைச் சார்ந்த கருவிகளும் ஜடப் பொருளாகும். உயிரானது இந்தத் தத்துவங்களுடன் பொருந்தாதபொழுது அவை அறிவில்லாதவை என்பது புலப்படும். அவ்வாறு இருந்தும் உயிரின் கண்களுக்கு இது புலப்படுவதில்லை. உயிரின் உண்மை நிலையை அறிவித்து உயிருக்குள்ள அறியும் தன்மையை

## இறைவன் திருவிளையாடல்

**எத்தனைஊர் எத்தனைவீடு எத்தனைதாய்
பெற்றவர்கள்
எத்தனைபேர் இட்டழைக்க ஏன்என்றேன்—நித்தம்
எனக்குக் களைஆற்றாய் ஏகம்பா கம்பா
உனக்குத் திருவிளையாட் டோ.**

—பட்டினத்தார்

---

உணர்த்துவதும் இறைவனுடைய அருளாகும். அருளானது உயிரின் மீது பதியும்பொழுது உயிருக்கு தன்னுடைய உண்மை அறிவுத் தன்மை வெளிப்படுகின்றது. அறிகின்றவன் உயிர் என்டது அப்பொழுது தெளிவடைகின்றது. அதாவது தன்னைப் பற்றியே அறியாமை நிலையில் இருந்த உயிருக்குள்ள அறியும் சக்தி இறைவனுடைய அருளால் வெளிக்கொணரப் படுகிறது. 'பளிங்கில் பவளப் பதித்தான் பதியே'' என்பது திருமந்திரம்.

''அறிவொன் றிலாதன ஐயேழும் ஒன்றும்
அறிகின்ற என்னை அறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென் றருள்செய்தார் நந்தி
அறிகின்ற நாளென்று அறிந்துகொண் டேனே''
(திருமந்திரம்......2181)

ஒவ்வொரு பிறவியிலும் உயிர் ஓரளவு பக்குவத்தைப் பெறுகின்றது. ஒவ்வொரு பிறவியிலும் இறைவன் உயிரின்பால் கருணை கொண்டு, அதை நன்னெறியில் செலுத்துதல் வேண்டி அந்த உயிரின்மீது இரக்கம் வைக்கின்றான். இறை இரக்கமே சத்தினிபாதம் எனப்படும். முகத்தின் கண்களுக்குப் பதிலாக அகத்தின் கண்களை விழிப்படையச் செய்வது அந்த சத்தினிபாதமாகும். அருள், அகக்கண் விழிப்படைதல், அறிவு பெறுதல் போன்றவை ஒரே நிலையை குறிக்கின்றன. இந்த நிலையை அடைவதற்கு முன்னோடியாக இருப்! து சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலியவையாகும். உடலையும், உள்ளத்தையும் தூய்மைபடுத்துவது சரியை, கிரியை, யோக வழிகளாகும். ஐம்புலன்களுடைய சேர்க்கையால் கூடிக் கிடக்கும் வெளிப்புற அனுபவங்களை வலுவற்றவைகளாகச் செய்து, உடலையும் உள்ளத்தையும் இறையுணர்வு பெறுவதற்குத் தயாராக்கிக் கொள்வதே சரியை, கிரியை, யோகம் போன்றவற்றின் முக்கிய கொள்கையாகும். இவற்றுடன் நிற்பது ஞானம். ஞானம் என்பது ஒரு பாதையாகவும், அந்தப் பாதையின் முடிவுமாகவும் உள்ளது. ஞான சாதனைகளைச் செய்வதன் மூலமாகவும் உள்ளத்தில் தூய்மையைப் பெறலாம். அந்தத் தூய்மையின் அடிப்படையில் சிற்றறிவு நீங்கி, முற்றறிவைக் காண வாய்ப்புப் நிகழலாம்.

உயிர் தங்கும் உடலானது ஐம்பூதங்களால் ஆனது. புலன்களும், இந்திரியங்களும் உடலுடன் சேர்ந்து நிற்கின்றன. அத்துடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு அந்தக்கரணங்களும் சேர்ந்தே உள்ளன. மனம் புலன்கள் வழி சென்று விஷய வாசனைகளில் ஈடுபடுகிறது. அதற்கு புத்தியும் அகங்காரமும் உதவுகின்றன. இவற்றால் நமக்குக் கிடைக்கக்கூடிய அறிவு சிற்றறிவாகும். இந்தச் சிற்றறிவிற்கு மேல் நமக்குக் கிடைக்கக் கூடிய பேரறிவு ஒன்று இருக்கின்றது. இது நமக்கு இறைவன் அருளால் கிடைக்கின்றது. ஆகவே, அருளே முதலாகும். அதை உணர்ந்தவுடன், எவற்றாலும் விவரிக்க முடியாத அடக்கம் ஒன்று உயிருக்குக் கிடைக்கின்றது. அகங்காரம் அலலது நான் என்று வலியுறுத்தும் நிலைமை வலிவு இழக்கத் தொடங்குகின்றது. மனதிற்கு ஒரு அடக்கமும் அமைதியும் வந்து சேருகிறது. அப்பொழுது உள்ளத்திலே சொல்லொணா அன்பு பெருகுகின்றது. இந்த அறிவையும், அடக்கத்தையும், அன்பையும் ஒன்று சேரக் கூடி நீங்காதிருக்கின்ற நிலைமையை உள்ளம் பெறுகின்றது. உள்ளமானது இறைவன் வீற்றிருக்கக்கூடிய கோவிலாகின்றது. எப்பொழுதும் இறைவனுடைய ஒலிக்கின்ற கழல்களை அணிந்து கொண்டிருக்கும் திருவடிகளை என்றுமே மறவாத ஓர் ஒப்பற்ற ஞானத்தினை உயிரும் பெறுகின்றது.

''அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர்பன்னும் பேரருளாளன்
குறியுங் குணமுங் குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தொனி யாமே''
(திருமந்திரம்......1471)

சரியை, கிரியை, யோகம் இம்மூன்றும் நம்மை பேரறிவுப் பாதையில் அழைத்துச் செல்லுகின்றன. அதாவது நாம், உடலும் உடலைச் சார்ந்த கருவிகள் மட்டுமே என்கின்ற நினைப்பு நீங்குகின்றது. ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மலங்கள் நம்மைக் கட்டுப் படுததுகினறன என்கிற உணர்வும் அதுவும் இறைவனுடைய அருள் என்டதும், அவற்றை அவிழ்ப்பதே நமுடைய நோக்கமாக இருக்க வேண்டும் என்பதும், அவைகளின் உண்மையான தன்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதும் நம்முடைய உள்ளத்திலே தோன்றத் தொடங்கிய பின்னர் மெய்ப் பொருளைப் பற்றிய அறிவு உதயமாகிறது. மெய்ப்பொருளை உணர்வதே ஞானமாகும். ''சன்மார்க்க சாதனம்தான் ஞானம், ஞேயமாம்'' என்பார் திருமூலர். அந்த நிலையில் எல்லாமே மெய்ப்பொருள் என்கின்ற உணர்வு உள்ளத்தில் பெருகெடுத்து ஓடுகின்றது. மாணிக்கவாசகப் பெருமான். இதையே 'ஒன்று நீ அல்லை அன்றி ஒன்று இல்லை' என்று பாடுகின்றார். ''மற்று ஒருபொருளும் இன்றி நீ நின்றமையால்'' என்ற திருவாய்மொழியின் கருத்தும் இதுவே. எல்லாமே சிவனுடைய உடைமை, அடிமை என்கிற உணர்வும் தோன்றுகின்றது. எலலாமே அவனுக்கே உரித்தாதல் என்கிற எண்ணமும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. ''என் தாயோடு என் அப்பன் ஏழேழு பிறவியும் அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்' என்று திருமூலர் எடுத்துக் காட்டுகின்றார். இத்தகைய ஞானம் பெற்ற ஞானிகள் இறைவனிடத்தில் நீங்காத அன்பு வைக்கின்றார்கள். அவனுடைய திருவருளின் தன்மையைப் பற்றி வியக்கின்றார்கள். அவனுடைய திருவடிகளைப் பெறுதலையே சிவ பாவனையாக கிடைக்கப் பெறுவர். அந்த ஞானமாவது உள்ளத்திலே ஆழப் புகும்போது

இறைவன் என்கிற பேரறிவை முற்றிலும் அறிந்து அதிலேயே அழுந்தி விடுவார்கள்.

''தன்பால் உலகும் தனக்கு அருகாவதும்
அன்பால் எனக்கு அருளாவதும் ஆவன
என்பார்கள் ஞானமும் எய்துஞ் சிவோகமும்
பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே',

(திருமந்திரம்....1469)

உயிர் அறிவுமயமானது. ஆனால் ஆணவத்தின் வலிமையால் உயிருடைய தன்மை உயிரிடமிருந்து மறைப்புண்டு கிடக்கின்றது. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவை உயிருக்கு அதனுடைய உண்மைத் தன்மையை இறைவனுடைய அருளால் சுட்டிக் காட்ட உதவுகின்றன. முக்கியமாக ஐம்புலன்களை நமது கைவசம் வைத்துக் கொள்ள வேண்டும். அவை போகும் வழியே மனமும் செல்லக் கூடாது. ஐம்புலன்களும் மதம்கொண்ட ஐந்து யானைகளைப் போன்றவை. அவற்றைஅடக்கி உள்ளத்தில் ஞானத்திரியைத் தூண்டி அகக் கண்களால் அறிவைக் காண முயல வேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு உயிரானது ஜோதி வடிவாகத் தோன்றும். உள்ளத்தில் வியாபித்து கொண்டிருக்கக்கூடிய பேரறிவின் தன்மைப் புலப்படும். இறைவனுடைய திருவடிகளைச் சேருதலும் சுலபமாகிவிடுகிறது.

''ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்
கூனை இருளற நோக்கும் ஒருவற்கு
வானக மேற் வழியென் தாமே''

(திருமந்திரம்...2316)

உயிர் பொறிகள், கரணங்கள் இவற்றுடன் சேர்ந்திருக்கும்பொழுது உயிரினுடைய அறிவு விஷய அனுபவங்களைச் சார்ந்து நிற்கின்றது. பின்னர் இறைவனுடைய அருளால் உயிர் தன்னை முழுமையும் அறிந்து கொண்ட பின்னர் தானும் அறிவுமயம் என்று உணர்ந்து கொள்கின்றது. இதனை திருமூலர் 'தன்னை அறியும் அறிவு' என்று கூறுகின்றார். உயிர் அறிவு வடிவமே என்கின்ற உண்மையும் புலப்படுகினறது. அதாவது, பொறிகள், கருவிகள் இல்லாமல், இறைவனைச் சார்ந்திருந்த பொழுது எதையும் தன்னாலே அறிந்துகொள்கின்றது. உயிர் அறிவுவடிவம் என்கின்ற உண்மை இறைவனுடைய கருணையால் உணர்த்தப்படுகின்றது. அந்த உண்மை உள்ளத்திலே பதியும்பொழுது உயிரும் தன்னை அறிவு வடிவம் என்று தெரிந்து கொள்கின்றது. இதையெல்லாம் உணர்த்துவது திருவருளே யாகும். அத்தகைய அறிவுக்கு அழிவில்லை, ஆக்கமும் இலலை. அந்த அறிவுக்கு பேரறிவான சிவமே ஆதாரப் பொருளாகும். உயிராகிய அறிவு தனது அறிவினாலே சிவமாகிய பேரறிவை அறிந்து கொள்ள முற்படுகிற அறிவு உதயமாகிறது. இதுவே வேதங்களின் முடிவான உபநிடதங்கள் கூறும் உண்மையும் ஆகும்.

''அறிவு வடிவென்று அறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி
அறிவு வடிவென் றருளால் அறிந்தே
அறிவு வடிவென்று அறிந்திருந் தேனே''

(திருமந்திரம்.....2357)

''அறிவுக் கழிவில்லை ஆக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்லது ஆதாரம் இல்லை
அறிவே யறிவை யறிகின்றது என்றிட்டு
அறைகின் றனமறை யீறுகள் தாமே''

(திருமந்திரம்.....2358)

அத்தகைய அறிவைப் பெறுவதே அறிவென்றும், மற்றவை அறியாமை என்றும் திருமூலர் கூறுகின்றார். விஷய வாசனைகளும் விஞ்ஞான அறிவும் வளர வளர அவற்றின் சாதனைகளை அறிவின் சாதனைகள் என்று பெருமிதம் கொள்கின்றோம், இறுமாப்பு அடைகின்றோம். ஆனால், அது உண்மையான அறிவல்ல. மெய்ப்பொருளை அறிவதே உண்மையான அறிவாகும், மற்றதெல்லாம் அறியாமையாகும். ஆனால், இதை நமமுடைய சாதனைகளுடைய பெருமையில் அழுந்தியிருக்கும்பொழுது அதைத் தவிர வேறொன்றும் இல்லை என்கின்ற தவறான எண்ணத்தில் மூழ்கிக் கிடக்கின்றோம். இந்த அறிவுஎன்னும் அறியாமையை ஒருவன் கடக்கும்பொழுது, உண்மையான அறிவினைப் பெறும்பொழுது, உலகத்தைப் பற்றிய அறிவைவிட அறியாமையே அழகிய தன்மையுடையது என்பதையும் உணருகின்றான்.

''அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை யழகிய வாறே''

(திருமந்திரம்..2362)

திருமூலர் கூறுகின்றார்; ''ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றால் கட்டுண்டு வெகுகாலம் நான் என்னை அறிந்து கொள்ள வில்லை. உனது அருளால் நான் என்னை அறிந்து கொண்ட பின்னர் என்னைச் சுற்றியிருந்த இருள் அகன்றது. ஆனால், உன்னையே அறிந்த பிறகு வேறொன்றின் மீதும் மனம் செல்லவில்லை. அவ்வாறு என்னை அறியச் செய்வதும், தொடர்ந்து கைவிடாது எனக்கு மேன்ப அறிவினைப் புகட்டி வருவதும் எனது உயிருக்குயிராய் நிற்கும் இறைவனே.''

''என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட்டு இருத்தலுங் கைவிடாது
என்னையிட் டென்னை உசாவுகின் றானே''

(திருமந்திரம்.....2366)

இந்த அறிவு ''எல்லாம் அறியும் அறிவு'' எனப்படும். இந்த அறிவைப் பெற முயற்சி செய்யாமல் மற்றவைகளையெல்லாம் அறிந்தும் பிரயோஜனம் இல்லை. ஆனால் நம்முடைய அறத்தினாலும், அன்பினாலும், தவத்தினாலும் இறைவனுடைய அருளாலும் பேரறிவினைப் பெறக்கூடிய தெளிவினை நம்முடைய உள்ளத்திலே பெற்றால், அந்த அறிவு நம்முடைய உயிருக்குயிராக நிற்கின்ற இறைவனாகிற பேரறிவினுடைய தன்மையைப் பெற்றது என்றும் உணர்ந்து கொள்ளலாம்.

''எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே''

(திருமந்திரம்...2596)

(தொடர்ந்து வரும்)




பேராசிரியை திருமதி சுமதி குமாரசுவாமி
மருத்துவக் கல்வி துணை இயக்குநர் (செவிலியல்)
எழிலகம், சென்னை-600 005.

''வெல்லுமா மிகவல்ல
மெய்ப்பொருளுக்கடியேன்''.

— சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சேக்கிழார் சுவாமிகள் அருளிய திருத்தொண்டர் புராணம் என வழங்கும் பெரிய புராணம் (பன்னிரண்டாம் திருமுறை) சிவ மூலமந்திரமான பஞ்சாட்சரத்தையொத்த சிறப்புடையது. சிவனடியார்களாகிய தனியடியார் அறுபத்து மூவரும், தொகையடியார் ஒன்பது பேரும் ஆக எழுபத்து இரண்டு அடியார் வரலாறுகள் இவ்வரிய நூலில் அடங்கும்.

மெய்ப்பொருள் நாயனார் புராணம் இந்நூலில் ஐந்தாவது இடத்தை பெறுகின்றது. திருக்கோவிலூர் என்னும் பகுதியை தலைநகராகக் கொண்ட சேதிநாட்டை மெய்ப்பொருள் நாயனார் ஆண்டு வந்தார். அவர்தம் பெருமையையும், அன்பினையும் சேக்கிழார்

''வேதநன்னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டுகாதலால் ஈசர்க்கன்பர்களுக்கு அறிந்தேவல் செய்வார்.''

''திரைசெய் நீர்ச்சடையான் அன்டர் வேடமே சிந்தை செய்வார்'' என்று கூறுகின்றார். அவரது ஆட்சியின் சிறப்பு கீழ்க்கண்டவாறு சிறப்பிக்கப்படுகிறது.

''தேடியமாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவனஆகும் என்று
நாடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக்
கொடுத்து வந்தார்''

அவர்தம் பெருமையை பொறாத முத்தநாதன் என்ற மன்னன் ''அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அவர்மேற் கொண்டு'' பன்முறை தோற்றுப் போனான். சிவனடியார் வேடம் கொண்டு வஞ்சனையில் வெல்லுவதே வழி எனக்கண்ட முத்தநாதன் அவ்வண்ணமே திருக்கோவலூர் அரண்மனையில் அரசன் துயில் கொள்ளும் இடத்தை அடைகின்றான். அவன் அரண்மனையை அடைந்த விதத்தை கீழ்க் கண்டபாடல் எடுத்துக் கூறுகின்றது.

''மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்
கட்டிக்
கையினிற் படைகரந்த புத்தகக்கவுளி ஏந்தி
மைபொதி விளக்கே என்னமனத்தினுள்
கறுப்பு வைத்துப்
பொய்த்தவ வேடங்கொண்டு புகுந்தனன்
முத்தநாதன்''

பொய்த்தவ வேடம் கொண்ட முத்தநாதன் கருமையை உள்ளடக்கி வெளிச்சத்தை தரும் விளக்கை ஒத்து திருநீற்றை உடல் முழுவதும் பூசி, வேணிகளை முடிந்து கட்டி கையினில ஏந்திய புத்தககக்கட்டில் வாளை ஒளித்துக் கட்டிப் புகுந்தனன். முத்தநாதன் வேடம் பொய்த்தவ வேடம் என்பதை சேக்கிழார் தெளிவுபட மிக அழகாக இப்பாடலில் விளக்கியுள்ளார். படிப்பவர் திகிலும், கவலையும் கொள்ளவைக்கும் பாடல் இது.

சிவனடியார் வந்தார் என்பதை செவிமடுத்த மன்னன், இடம், ஏவல், குறிப்பு எதையும் அறியாது அவர் வந்திருந்தாலும்

''அண்டர் நாயகனார் தொண்டராம்''

எனக்குவித்த செங்கை கொண்டெழுந்து எதிரே சென்று வணங்கினாராம். என்னே! மன்னன் பரம்பொருளிடமும், அவர் அடியாரிடமும் கொண்ட அன்பும் பக்தியும்.

முத்தநாதன்,

''உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த
ஆகமநூல் மண்மேல்
எங்குமிலாததொன்று கொடுவந்தேன்''
என்று கூறுகின்றான்.

ஆம்! முத்தநாதன் கூற்று உண்மை. முத்தநாதன் 'நம் நாயகனார்' என்று கூறவில்லை. ''உங்கள் நாயகனார்'' என்று கூறினார். அவனிடத்தில் சிவபெருமான்பால் அன்பிருந்தால், இப்பாதகச் செயல் புரிய அவன் அன்புமனம் இடங்கொடுத்திருக்காது அல்லவா!

''இதனினும் பெரும் பேறு எனக்கில்லை எனக்கு நூலை வாசித்து அருள்செய்க''! என மன்னன் கூற முத்தநாதன் ''நானும் நீயும் வேறிடத் திருக்கவேண்டும்'' என்றுகூற மெய்ப்பொருள் நாயனார் தனது தேவியாரை அந்தப்புரத்திற்கு போகச் செய்து பொய்த்தவ வேடம் கொண்ட சிவனடியாரை ஆசனத்தில் இருக்க வைத்து, தான் கீழே அமர்ந்து வணங்கி 'இனி அருள் செய்யும்' என்கிறார்.

முத்தநாதன், புத்தகக்கவுளியை மடிமேல் வைத்து புத்தகம் அவிழ்ப்பான் போன்று மறைத்துவைத்திருந்த வாளை எடுத்து வஞ்சகச் செயலை நிறைவேற்றி விடுவதைக் காணுகின்றோம். அந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் காட்டும் பாடல் இது.



''கைத்தலத் திருந்த வஞ்சக் கவுளிகை
படிபேல்வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர்
வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான் முன் நினைத்த
அப்பரிசே செய்ய
மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனத்
தொழுது வென்றார்.'

வாயால் சொல்ல, எழுத்தினால் எழுத இயல வில்லை. அஞ்சத்தக்க மாபெரும் பழிச் செயலைச் செய்து முடித்து விட்டான் முத்த நாதன். எனினும் முத்தநாதன் வெல்லவில்லை. வென்றது மெய்ப்பொருள் நாயனார்தான்! அங்கு முத்தநாதனை கருவியாக்கி இறைவன் மெய்ப்பொருள் நாயனார் சிறப்பை உலகுக்கு உணர்த்தி அவரை ஆட்கொண்டு அருளுகின் றார்.

நடந்த செயலை அறிந்த தத்தன் பொய்த் தவ வேடதாரியை வாளினால் கொல்ல முயல

''தத்தா! நமர்''என தடுக்கின்றான் மன்னன். ''எம்பிரான் அடியார் போக மீதிடைவிலக்கா வண்ணம் கொண்டு போய்விடு நீ'' என்கிறார். தத்தனும் அவ்வண்ணமே சிறுஊறும் நேராத படி முத்தநாதனைப் பத்திரமாகக்' கொண்டு போய் ஊர் எல்லைக்கு அப்பால் விட்டு விடு கிறான்.

''ஆளறாக்கானஞ் சேர
வெவ்வினைக் கொடியேன் தன்னை விட்டபின்'

வந்து தத்தன் செய்தியை சொல்ல,

''இன்றைக்கு ஐயன் செய்ததுயார் செய்ய வல்லார்'' என்று நின்ற தத்தனை நோக்கி கூறி அனைவரையும் திருநீற்றின் அன்பைப் பாது காக்குமாறு கூறி, இறைவன் திருப்புகழைச் சிந்தை செய்கிறார் மெய்ப்பொருள் நாயனார். இறைவனும் அன்பரைத் தம் திருவடிக் கீழ் வைத்து ஆட்கொள்கிறார்.

''தொண்டானார்க் (கு) இமயப்பாவை
துணைவனார் அவர்முன் தம்மை
கண்டவாறெதிரே நின்று காட்சி தந்தருளிமிக்க
அண்டவானவர்கட் கெட்டா அருட்கழல் நீழல்
சேரக்
கொண்டவாறிடையறாமல் கும்பிடுங்
கொள்கை நீத்தார்''

இவ்வரலாற்றில் வென்றவர் மெய்ப்பொருள் நாயனாரே. அவர்தான் அண்டவானவர்கட்கும் எட்டா அருட்கழலை அடையும் பாக்கியம் பெற்றார். திருவள்ளுவரும் பொறையுடைமை என்ற அதிகாரத்தில்

''ஒறுத்தாருக் கொருநாளை இன்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.''

''மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்றுவிடல்' என்று கூறுகின்றார்.

''தீங்கு செய்தவனுக்கு உண்டாவது ஒரு நாள் இன்பம். அதனைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழுண்டாகும்.

தீயகாரியங்களை மனச்செருக்கால் செய்பவரை தாம் தமது பொறையினாலே வென்றுவிடலாம் என்பதே மேற்கண்ட குறள்கள் இரண்டின் பொருளாகும்.

தெய்வப்புலவர் ஈறாயிரம் ஆண்டுகட்கு முன்பு ''வென்றுவிடல்'' 'பொறையினால்' எனத் தெளிவுபடக் கூறியதையே பன்னிரண்டாம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமான், ''மெய்ப்பொருள் நாயனார் முத்தநாதனை வென்றார்'' உலகம் அழியும் அளவும் அழியாப் புகழையும்,தெய்வப் பேற்றையும் அடைந்தார் என்று நவில்கின்றார். திருநீற்றின் அன்பைப் பேணுமாறு அனைவருக்கும் அறிவுறுத்தினார் மெய்ப்பொருள் நாயனார்.

பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணமும் கூன் பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்பு நோயை திருஞான சம்பந்தர் ''மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு'' என்ற திருநீற்றுப் பதிகம்பாடி திருநீற்றை இட்ட பொழுது, கூன்பாண்டியன் வெப்புநோய் நீங்கி கூனும் நீங்கி சௌந்திர பாண்டியனாக மாறியதாக இயம்புகிறது. 'நிறை மொழி மாந்தார் ஆணையிற்கிளர்ந்த மறை மொழியே' மந்திரம். திருநீறும் கண்டிகையும் மெய்ப் பொருள். ஆகையினாலேயே திருநீறு நிறை மொழி மாந்தரான திருஞான சம்பந்தர் ஆணையால் மறைமொழி ஆனது.

சிவநாமமும், திருநீற்றின்பால் கொண்ட
அன்பும்
சிவனடியார் தொண்டும் அழியாப் பேரின்ப பெருவாழ்வைத் தரும் என்பதை மெய்ப் பொருள் நாயனார் புராணம் உலகுக்கு உணர்த்துகின்றது.

பொய்த்தவம் பூண்ட முத்தநாதன் வென்றது போன்று தோன்றினும் உண்மையில் வென்றது மெய்ப்பொருளே - மெய்ப்பொருள் நாயனாரே. அதனாலேயே ''வெல்லுமாமிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்'' என்று போற்றிப் புகழ்ந்துள்ளார் சுந்தர மூர்த்தி நாயனார்.

— — — —

# மீனாட்சி திருவருள்



**புலவர் பாலம்மாள்**

குற்றம் பல புரிந்து குவலயத்தில் வாழும் நான்
கற்றாவை நாடுவ போல் நாள்தோறும் உன்றன்
பொற்றாமரை யடியைத் தேடுவேன் மீனாட்சி
வற்றாத உன் அருளை வேண்டி தவம்
இருப்பேன்.

நாடுகின்றேன் நாடித் தினந்தினமும்
பாடுகின்றேன் பண்ணோடு பாமாலை
சூடுகின்றேன் நின் செந்தாமரையடியை
தேடுகின்றேன் மீனாட்சி உன்னருளையே.

வாழ்வும் உடலும் சதமென்று தானினைந்து
சூழ்கின்ற சுற்றத்தோடு தொடர்ந்து விட்டேன்
தொல்லுலகில்
தாழ்வுற்றேன் சங்கரியே மீனாட்சி
உனைமறந்து
பாழ்பட்டேன் பிழைபொறுத்து ஆள்வாய்
அம்மா

அன்பர் அகத்து அகலாது வீற்றிருந்து அடியார்
துன்பம் துடைத்து அருள்புரியும் சோதியே
சுடர்க் கொடியே
என்று உன் அருள் பெற்று உய்ந்திடுவேன்
மீனாட்சி
மன்றாடும் மணியாட மர்ந்த மலர்க்கொடியே!

தூண்டா மணிவிளக்கே சொக்கருடன் அமர்ந்த
காண்டற்கரிய கற்பகமே கருத்துள் வைப்போர்
வேண்டுவன வெல்லாம் அளிக்கும் அருள்கடலே
என்னையும்
ஆண்டு கொண்டு அருள்புரிவாய் அம்பிகையே!

பாட வகையறியேன் பண்பாட நாவறியேன்
தேட வழிதெரியேன் சிந்திக்கப் புத்தியிலேன்
ஓடத் தெரிந்தேன் வழிதவறி மீனாட்சி
உன்புகழை
பாடத் தெரியாத பாவியேன் என் செய்வேனே!

உன்னை நினைக்கில் என் உள்ளம் எல்லாம்
நிறைந்து
இன்பப் பெருக்கில் திளைத்திடுவேன்
என்தாயே
என்புருக இதயமுருக என் ஊன்உருக
உயிர் உருக
அன்பு நிலைமாறாதிருக்க அருள்புரிவாய்
அம்பிகையே!

# திருக்குறுக்கை வீரட்டானம்

கோயிற்கலைச் செல்வர்
தி. இராசமாணிக்கம்

காவிரியின் வடகரையில் அமைந்துள்ள 26-வது தலமான திருக்குறுக்கை தற்காலத்தில் 'கொறுக்கை' என மக்களால் அழைக்கப் பெறுகிறது. மயிலாடுதுறையினின்றும் மணல் மேடு செல்லும் வழியில் உள்ள கொண்டல் என்ற இடத்தினின்றும் 3 கி.மீ. தொலைவில் இந்தப் பதி உள்ளது

நீண்ட கைகளை உடைய தீர்க்கவாகு என்ற முனிவரின் நீண்ட கைகள் இங்குள்ள பிள்ளையார் அருளால் குறுகிய காரணத்தால், இந்தத்தலம் குறுக்கை என்ற பெயரினைப் பெற்றது.

**புராணப் பெருமை:**

சிவபெருமானிடம் பெரு வரங்கள் பெற்ற சூரபன்மா ஆகியோரை அழிக்க சிவபெருமான் உமை அன்னையை மணந்து ஒரு மகவினை அளிக்க வேண்டும். இதற்காக இறைவன் கொண்ட மோன நிலையைக் கலைக்க, தேவர்கள் காமனை அனுப்பினர். அவன் இறைவன் மீது மலர் அம்புகள் ஐந்து விட்டான்.

''விட்ட வெம்பகழி ஐந்தும் வியத்தகு விமலன் மது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன், பார்த்தலோடுங்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமன்
சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவற் றன்றே''
(கந்தபுராணம்.)

என்பர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள். காமனை நீறாக்கிய இறைவனது பேராற்றல் நிகழ்ந்த இடம் திருக்குறுக்கை எனப் போற்றப் படுகிறது.

**திருவருட்செல்வர்கள் திருவாக்குகள்:**

இந்த அரும் பெருஞ் செயலை திருஞான சம்பந்தப் பெருமான் 16 இடங்களிலும, அப்பர் அடிகள் 83 இடங்களிலும், சுந்தரர் 19 இடங்களிலும், மணிவாசகர் திருவாசகத்தில் 3 இடங்களிலும், திருக்கோவையாரில் 7 இடங்களிலும் பரவிப்பாடியருளியுள்ளனர். 9-ஆம் திருமுறையில் ஒரு இடத்தில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தத்துவப் பொருள்:**

இறைவன் காமனைக் காய்ந்தது அவன் காம நிலைக்கு அப்பாற்பட்டவன் என்பதை உணர்த்துகிறது. தவநெறி மற்றும் அருள் நெறியில் நடப்போர் காமவேட்கை எழின் இறையருளை உன்னி அதனை அடக்க வேண்டும் என்றும் பொருள் கொள்ளப் படுகிறது.

**திருக்கோயில்:**

கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முக மண்டபம், இருதிருச்சுற்றுகள், 5 நிலைகள் மற்றும் 3 நிலைகள் உடைய இரு கோபுரங்கள் கொண்ட இந்தக் கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு முன் திரிசூல கங்கை என்ற பசுபதி தீர்த்தம் உள்ளது. கடுக்காய் இந்தத் தலத்தின் தலமரம். அன்னையின் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. ஞானாம்பிகை என்பது அவரது திருப்பெயர். இறைவனது திருநாமங்கள் யோகீசுவரர், வீரட்டேசுவரர் என்பனவாம். ஆவுடையாரில் தாமரை மலர் காணப்படுவது மன்மதன் எய்தது எனப்படுகிறது.

**சமய மாண்பு:**

அப்பர் பெருமானின் திருப்பாடல்களைப் பெற்ற தலம் இது. இந்தத் தலத்தைப் பற்றிய திருப்பதிகத்தில் அப்பர் சுவாமிகள் இறைவன் மார்க்கண்டேயர், சண்டி கேசுவரர், கோச்செங்கணான், சாக்கிய நாயனார், கண்ணப்ப நாயனார், இராவணன் ஆகியோருக்கு அருள் புரிந்ததை வெகு அழகாக ஒவ்வொரு திருப்பாடலிலும் வியந்து கூறியுள்ளார். இது இறைவனது அளப்பற்ற ஆற்றலையும், அன்பர்களிடம் காட்டும் பெருங் கருணைத் திறத்தையும் வலியுறுத்துகிறது.


**கலைச் சிறப்பு:**

ஆகம விதிகளின்படி காமதகன மூர்த்தியை யோகதட்சணா மூர்த்தியாக அமைக்க வேண்டும். அவனுக்கு முன்னால் மன்மதன் வீழ்ந்த நிலையில் காணப்பட வேண்டும்.

காமனைக் கண்ணால் காய்ந்த இறைவன் உள்ள மன்றம் ''சம்பு விநோத சபை'' என்றும் ''காமாங்கநாசினி சபை'' என்றும் அழைக்கப் பெறுகிறது. இறைவன் வீராசனத்தில் உட்கார்ந்து இருக்க, அருகில் சனகாதி முனிவர்கள் நால்வர் இருப்பது இவனது யோக நிலையைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும் இங்கு அன்னையும் காணப்படுகிறாள். காமன் கீழ வீழ்ந்த நிலையில் அமைக்கப்படவில்லை. இறைவன் மற்றும் இறைவியின் திருவுருவங்கள் எழில்மிக்க சோழர்கால படைப்புகள்.

இரதியும் மன்மதனும் தனியாகச் செப்பு சிலையில் நின்றநிலையில் உள்ளனர். இரதியின் வலக்கையில் கிளியும், மன்மதனின் இரு கைகளில் வில்லும், மலரம்புகளும் காணப்படுகின்றன. காமனுக்குக் கோயில் முற்காலத்தில் இருந்ததையை சிலப்பதிகாரத்தினின்றும் தெரிய வருகிறது. விசய நகரப் பேரரசர்கள் ஆட்சியின்போது நிர்மாணிக்கப் பெற்ற நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்களில் உள்ள தூண்களில் இரதி, மன்மதன் ஆகியோரின் எழிலார்ந்த வடிவங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. அவையாவும சிலா வடிவங்கள். வேறு எந்தக் கோயிலிலும் இங்கு உள்ளதைப் போன்று இரதி, காமன் ஆகியோரின் செப்புச் சிலைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இவை இரண்டும் கலைத்திண்மையுடன் உருவாக்கப் பெற்றுள்ளன.

# திருமுறை



# அருச்சனை

மா. வெ. மு. நாகராஜ குருக்கள்
சிறுதையூர், லால்குடி,

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தெய்வத் தமிழ்த் திருமுறைகளினால் அருச்சனைகள் செய்வதைப் பக்தியிற் சிறந்த பெருமக்கள் விரும்பி வரவேற்க வேண்டுவது அவசியமாகும். அருச்சனை என்பது நன்மக்கள் தம்பேரன்பினை இறைவன்பால் தெரிவிக்கும் சாதனமே யாகும். சமயத் தொடர்புள்ள பழக்க வழக்கங்களை - சடங்குகளை நன்கு ஆராய்ந்து பார்த்தால், தூய அன்பு வெளிப்படுவதற்குரிய நெறிமுறைகள் நிரம்பியிருப்பதை உணரலாம். அருச்சனை எனும் கிரியை (செயல்) தெய்வச் சிந்தனைகளால்-மந்திர மொழிகளால்-பணிவுச் செயல்களால்-நன்கு உழுது வைக்கப்பட்ட வயல் ஆகும். இவ்வயலிலே தெளிக்கின்ற வித்து அன்பாகும். இதையே மாணிக்கவாசக சுவாமிகள் ''அருச்சனை வயலுள் அன்புவித்திட்டு' என்று அருளுகின்றார்கள். சமயப் பற்றுமிக்க நல்ல மனிதனுடைய அறப்பண்புகளையும் அறச்செயல்களையும் அருள் நந்தி சிவாசாரியர் வரிசையாகக் குறிப்பிட்டுக் காட்டும்போது 'அறிவொடு அர்ச்சனை' பற்றி மிகத் தெளிவாகக் குறித்துள்ளார்கள்.

சிவஞான சித்தியார் என்னும் நூலின்கண் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

''ஒழுக்கம் அன்பருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்க ளானால்
இரங்குவான் பணி அறங்கள்'


''ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம் குற்றமற்ற தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை அழுக்கற்ற துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆகிய இவைகள் இழுக்கில்லாத அறங்கள் (தர்மங்கள்) ஆகையால் இவ்வறப் பணிகளைச் செய்பவர்களிடம் இறைவன் இரங்கி அருள் புரிவான்' என்பது இதன் கருத்து.

இப்பாடலில் கூறப்பட்ட ஒழுக்கம் முதலிய அறப்பண்புகளும் அறச்செயல்களும் நம் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வேரூன்றிவளர்ந்து வருகின்றன. இவற்றினைத் தவறாது பேணிப் பாதுகாப்பதற்காகவே அறநிலையங்கள் அமைந்துள்ளன. இங்ஙனம் தெய்வத் தொடர்புள்ள அறங்களில் தனிச் சிறப்புடைய அறிவொடு அருச்சனைப் பற்றி அடுத்த பாடல் கூறுவதாவது :—

மனமது நினைய வாக்கு
வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையில் கொண்டங்கு
இச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றிவாழும் செயல்
அறமானால் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும்
செயற்கு முன்னிலை யாமன்றே'

''நாம் விரும்பிய தெய்வத்தை மனத்தால் நினைந்து, வாக்கினால் மந்திரங்கள் சொல்லி, வணங்கிக் கையில் நறுமணமுள்ள மலர்களைக் கொண்டு போற்றி (அருச்சனை செய்து), சினம் முதலிய தீய குணங்களை அகற்றி வாழும் வாழ்க்கை அறமானால், முதல்வனாகிய சிவ பெருமான் எங்கும் அவர்கள் செயல்களுக்கு முன்னின்று நல்லருள் புரிவார்'' என்று இப் பாடலில் சொல்லியபடியே, இந்நாளில் திருக் கோயில்களில் வாயினால் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு, கையில்மலர்களை ஏந்தித் தெய்வத் திருமேனிகளுக்கு அருச்சனைகள் நடைபெறுவதைக் காண்கின்றோம்.

இத்தகைய அருச்சனைகள் வடமொழியில் மட்டுமல்லாமல், நம் தாய் மொழியாகிய தமிழிலும் நடைபெற வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. 1954-ஆம் ஆண்டிலிருந்தே தூத்துக்குடி, ஈரோடு, அம்பாசமுத்திரம், பேரூர் ஆகிய தலத்து ஆலயங்களில் தமிழ் அருச்சனைகள் நடந்து வருகின்றன. இப்போது எல்லாக் கோயில்களிலும் தமிழ் அருச்சனை நடைபெறவும், பரவிப் பெருகவும் வகை செய்யப்பட்டுள்ளன. திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்கள் இவற்றால் தமிழில் அருச்சனை செய்வது, சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், சமயச் சான்றோர்கள், தமிழ்ப் பற்றுமிக்க நல்லறிஞர்கள் ஆகிய எல்லோருடைய கருத்துக்களுக்கும், பேரன்பிற்கும் ஏற்றதாகப் பொருத்தமாகவே அமைகின்றது.



நமக்குப் பிரமாணமாகவுள்ள பழம் பெரும் சமய நூல்களிலேயே இதற்குப் போதிய ஆதாரங்கள், சான்றுகள் உள்ளன. எல்லாம் வல்ல இறைவனைப் பற்றிய செய்திகள், தோத்திரங்கள் சாத்திரங்கள் முதலிய நூல்களெல்லாம் வடமொழி தமிழ்மொழி ஆகிய இவ்விரண்டு மொழிகளிலும் எண்ண முடியாத அளவுக்கு ஏராளமாக உள்ளன. இதன் காரணமாகவே தமிழாகமம் அருளிய திருமூலர் பெருமான்,

தமிழ்ச் சொல்வட சொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலுமாமே'

என்று தமது திருமந்திரத்தில், தமிழ் மொழி வடமொழி என்னும் இவ்விரண்டு மொழிகளும் இறைவனைப் பற்றி உணர நமக்கு வேண்டுவனவாகும் என்ற கருத்தை உணர்த்தியுள்ளார்.

மேலும் திருமூலரடிகள் 'செந்தமிழ் முதலியவற்றை நன்கு அறிந்து தெளிந்து வழிபாடு செய்தல் வேண்டும். இதனை நந்தி (சிவபிரான்) உரைத்தார் எனவும், தமது திருமந்திரத்தில் சொல்லியுள்ளார்.

''செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடும்
நந்தி இதனை நவமுரைத் தானே''

—'திருமந்திரம் 1089.

திருக்கோயில்களில் அருச்சனை செய்பவர்கள், தமிழின் தொன்மையையும் தெய்வத் தன்மையையும் நன்கு அறிதல் வேண்டும். இருக்கு முதலிய நான்கு வேதங்களை எவ்வாறு தெய்வ வழிபாட்டிற்கு உரியனவாகப் போற்றுகின்றோமோ, அவ்வாறே தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களையும், சிவபெருமான் விரும்பிக் கேட்ட சிவ சம்பந்தமுள்ள வாக்குகள் எனக் கருதிச் சிவாசாரியர்கள், அவற்றினை வணங்கி வழிபட்டுச் சிவார்ச்சனைக்குரியன வாகப் போற்றி வருதல் வேண்டும்.

தெய்வச் சேக்கிழார் பெருமான் தம்து பெரிய புராணத்திலே, திருஞான சம்பந்த சுவாமிகளை 'வண்தமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்' எனவும், 'புதிய செந் தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார்' எனவும் குறிப்பதிலிருந்து தேவாரம் தமிழ் வேதம் என்பதை நன்கு உணரலாம். சம்பந்தர் அப்பரடிகளுடன் திருமறைக்காடு 'கோயிலுக்குச் சென்றது பற்றித் தெரிவிக்கும்போது சேக்கிழாரடிகள், திருநாவுக்கரசரை 'தமிழ் மொழித் தலைவர்' என்றே குறிப்பிடுகின்றார். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தைச் சிதம்பரம் நடராசமூர்த்தியே அந்தணராக வந்து தம் கரங்களால் திருவாசகம் முழுமையும் எழுதித் 'தில்லைச் சிற்றம்பலவன்' என்று கையொப்பமிட்ட திருவாசகச் சுவடியை

கோயிற் படியின்மீது வைத்துவிட்டு மறைந்த தாக மணிவாசகர் வரலாறு நமக்கு உணர்த்து கின்றது. எனவே சிவபெருமானிடம் இடை யறாத அன்பு கொண்ட தமிழ் நாட்டுச் சமயச் சான்றோர்கள் அனைவரும், தேவார திருவாச கங்களைத் தமிழ் வேதமாகக் கொண்டு, அம் மறைவழி வழக்கங்களை மேற்கொண்டு வருவத னால்தான், ஆலய வழிபாடுகள் தமிழ்நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குகின்றன.

''வகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்'' என்று திருஞானசம்பந்தர் அருளியபடி இறைவனால் வகுக்கப்பட்ட வடமொழிச் சிவாகமங்களிலேயே, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமயா சாரியர் நால்வருக்கும் விசேட பூசைகள் திரு விழாக்கள் விதிக்கப்பட்டிருப்பதை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

பூர்வகாரணாகமம் பகோற்சவ விதிப் படலத்திலுள்ள சுலோகம் வருமாறு:

''சம்பந்த; சுந்தரச் சைவவித்நநாமா
த்ரயஸ்ததா பக்தயாகம் த்ரிகாலஞ்ச
த்வாதசம்பரி கீர்த்திதம்''

இதன் பொருள் சம்பந்தர் சுந்தரர் அப்பர் என்ற மூவருக்கும் முப்போதும் பக்தயாகத்தை செய்து பன்னிரண்டுநாள் உத்ஸவம் (திருவிழா) கொண்டாடத்தக்கது''. சூட்சுமாகமம் பக் தோற்சவ விதிப் படலத்தில்:

ஸ்ரீமத் வாதபுரேஜாதம்
பக்தம் தேவ்யாக்ரஹ
பிவா தேவாக்ரேவா
விசேஷண ஹஸ்தம்
புஸ்தகசம்யுதம்''

என வருகின்றது.

இதன் பொருள்; ''திருவாதவூரில் தோன் றிய பக்தராகிய மாணிக்கவாசகரைக் கையில் புத்தகத்துடன் கூடியவராகத் தேவி ஆலயத் திலோ, அல்லது சிவபெருமானின் முன்னிலை யிலோ எழுந்தருளச் செய்து, புதிய ஆடைகள் அணிவித்தும் ரட்சாசூத்திரம் சாத்தியும் சிறப் பாகப் பூஜைகள் செய்யவும்''.

இவ்வாறெல்லாம் மூலாகமங்களிலேயே தமிழ் வேதம் பாடிய சமயாசாரியர்கள் நால்வ ருக்கும் திருக்கோயிலேயே சிறப்பு வழிபாடு களும், திருவிழாக்களும் விதிக்கப்பட்டிருப்பதி லிருந்தே, தமிழ் வேத வழிபாடுகளைச் சிவ பெருமான் இனிது விரும்பி ஏற்று நல்லருள் புரிவர் என்பது உய்த்து உணரத்தக்கதாகும். திருக்கோயில் வழிபாட்டு முறைகளைத் தெளி வுறக் கூறும் சிவாகமப் பொருள்களும் தேவார திருவாசகம் அருளிய நால்வர் நோக்கமும் கொள்கைகளும், சிவபெருமானையே குறிக் கோளாகக் கொண்டு, நம்மவர்களுக்கு வழி பாட்டு நெறிகளை உபதேசிக்கின்றன. சிவாலய பூசைகளில் நால்வர் பாடிய தமிழ் வேத வழக்க மும் இடம் பெற்றால்தான் சிவாகம நெறி மேலும் சிறப்புற்று விளங்கும் என்று கருதுதல்

## ஏகாதசி விரதம்!

**விரதங்களில் சிறந்தது ஏகாதசி விரதமே ஆகும். சகல பாவங்களையும் போக் கும் வல்லமை கொண்ட அசுவமேத யாகப் பலனுக்குச் சற்றும் குறையாதது ஏகாதசி விரதப் பலன்.**

வேண்டும். வடமொழிச் சிவாகமங்களில் சொல்லப்படுகின்ற அருச்சனை விதிகளையே சம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகிய சமயாசாரியர்கள் நால்வரும் தமிழ் மொழியில் இனிய தோத்திரங்களாகப் பாடி யுள்ளார்கள்.

சிவாலய வழிபாட்டிற்கு வேண்டுவன வாகிய ஒழுக்க விதிகளில், புலர்வதன் முன் எழுந்து தண்ணீரில் மூழ்கி எழுந்து நியமத் துடன் திருநீறணிதல், திருக்கோயிலைக் கூட்டி மெழுகிக் கோலம் போடுதல், நறுமணமுள்ள மலர்களைப் பறித்து வருதல், திருவிளக்கேற்று தல், சிவபெருமானுக்குத் தூய்மை மிக்க தண்ணீராலும், எள் நெய், பசும்பால், நெய், தயிர், பஞ்சகவ்வியம், நெல்லிக்கனி, இளநீர், தேன், பழச்சாறுகள், சந்தனம் முதலியபொருள் களால் இருக்கு ஓதி (மந்திரம் சொல்லி) அபி டேகம் செய்தல், ஆடை அணிகள் அணிவித் தல், சந்தனமிடுதல், பலவகை மலர் மாலை களைச் சாத்துதல், மணமுள்ள மலர்களால் சிவபெருமான் திருநாமங்களைச் சொல்லி இறைவன் பொன்னடி போற்றுதல், நறும் புகை (தூபம்) நுகர்வித்தல், நிவேதனம் செய் தல், தீப ஒளி காட்டுதல், மனமுருகப் பாடுதல் ஆடுதல், பிழைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டுதல், திருக்கோயில் வலம் வருதல், வீழ்ந்து வணங்குதல், அஞ்சலி கூப்புதல், பஞ் சாட்சர செபம் செய்தல் முதலிய வழிபாட்டுக் கிரியைகளைச் சமயாச்சாரியர் நால்வரும் தம் தமது தேவார திருவாசகப் பாடல்களிலேயே பல இடங்களிலும் தெரிவித்துள்ளார்கள். இவ் வழிபாட்டு நெறிமுறைகளையே சிவாகமங்கள் மிக விரிவாக வகைப்படுத்தி விதிப்படிச் சொல் கின்றன. தேவார திருவாசகங்கள் குறிப்பாகச் சொல்லுகின்றன. சிவாகமங்களுக்கும், சைவத் திருமுறைகளுக்கும் திருக்கோயில் வழிபாட்டு முறைகளில் எவ்வித வேறுபாடும் இல்லையென் பது ஆராய்ந்துபார்ப்பவர்க்கு நன்குபுலனாகும்.

இன்று சிவாலயங்களில், பிள்ளையார், சுப்பிரமணியர், மூலவர் (சிவபிரான்) அம்பிகை இவர்களுக்குச் செய்யப் பெறும் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என்ற அஷ்டோத்திரசத நாமங் களும் சிவாகமங்களில் சொல்லப்பட்டவை அல்ல. இந்த நாமாவளி அருச்சனைகள், மகிரிஷிகளால் புராணங்களில் சொல்லப்பட் டனவாகும். உதாரணமாகப் பெரும்பாலும்

விநாயகருக்குரிய நூற்றெட்டு அருச்சனை பவிடியோத்தர புராணத்திலும், சிவபெருமானுக்குச் செய்யப்படுகின்ற நூற்றெட்டு அருச்சனை கந்த புராணத்திலும், ஆயிரத்தெட்டு நாமாவளிகள் மகாபாரதத்திலும், அம்பிகைக்குள்ள லலிதா சகசிரநாமம் பிரம்மாண்ட புராணத்திலும் கூறப்பட்டனவாகும். இதே போல தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களில் சிவபெருமானைப் புகழ்ந்து பாடிய நாமாவளிகள் ஆகிய திருநாமங்களைச்சொல்லி அருச்சனை செய்வதில் தவறு ஒன்றுமில்லை.

வடமொழி நாமாவளியின் முடிவில் வரும் 'நம' என்பதற்கு நேரான தமிழ்ச் சொல் 'போற்றி' என்பதாகும். போற்றுதல்-தொழுதல் என்ற சொற்கள் வணக்கத்தைத் தெரிவிப்பனவாகும். நம என்ற சொல் நமஸ்காரத்தைத் தெரிவிப்பதாகும். 'அஞ்சலி மலர்த்தி முன்போற்றுங் கைகளோ' என்று சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தில் பாடியிருப்பதிலிருந்தும், 'போற்றி' என்ற சொல் நமஸ்காரமாகிய வணக்கத்தைச் சிவபெருமான் திருவடிகளில் பணிவுடன் தெரிவிப்பதே என்று தெளிதல் வேண்டும்.

எனவே திருக்கோயில்களில் அருச்சனை புரியும் சிவாசாரியர்கள், தமிழ் அருச்சனை செய்வதற்கு ஆர்வமும் விருப்பமும் மிக்குடையவர்களாக விளங்க வேண்டுவது அவசியம். மேலும் சிவாலய பூசைகளில், அபிடேகம், அருச்சனை நிவேதனம் தீபாராதனை முதலிய கிரியைகளைச் செய்யும்போதும், அனபர்களுக்குத் திருநீறு முதலிய திருவருட் பிரசாதங்களைத் தரும்போதும், பொருத்தமாக உள்ள திருமுறைப்பாடல்களைச் சொல்லி வந்தால் கோயில் வழிபாடுகள் மேன்மேலும் சிறப்புற்று விளங்கும். இதனால் சிவனடியார்களுக்கும், வைணவ அடியார்களுக்கும் தமிழ்ப்பற்று மிகுந்தவர்களுக்கும் நெஞ்சு நெகிழ்ந்து, உருக்கம் மேலிட்டு, மனத் தூய்மையும், இறைவன் பால் பக்திப் பெருக்கும் ஏற்படும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், நம்பியாண்டார் நம்பிகள், அருள்நந்தி சிவாசாரியர் உமாபதி சிவாசாரியார் ஆகிய சைவ சமயச் சான்றோர்கள், திருக்கோயில் வழிபாடு செய்யும் அருச்சகர் மரபில் தோன்றியவர்களே. சோழப் பேரரசர் ஆகிய அடயகுலசேகர இராசராசன், தில்லை நடராசர் கோவிலுள் மறைந்து மண்மூடிக் கிடந்த மூவர் தேவாரச் சுவடிகளைத் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டே கண்டெடுத்து, ஆகம மந்திர முறைப்படி பதினொரு திருமுறைகளாக வகுக்கப்பட்டதாகத் ''திருமுறை கண்ட புராணம்' சொல்லுகின்றது. மிக்க இளமையிலேயே சிவனருள் நிரம்பப் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள் இயல்பாகவே தமிழ்ப் பற்று மிகுந்தவராயும், தமிழ் வேதமுழுமையும் ஓதும் நியமமுடையவராயும் இருந்தமையால், ஞானசம்பந்தராதி சமயாசாரியர்களின் திருவுள்ளக் குறிப்பு, நோக்கங்களைத் தெளிய உணர்ந்தவராகவும், திருத்தொண்டர்களின் வாழ்க்கை வரலாறுகளை நன்கறிந்தும் விளங்கினார்கள் என்பதற்கு அவர்கள் பாடிய செந்தமிழ்ப் பாடல்களே இன்றும் நமக்குச் சான்றாக உள்ளன.

சகலாகம பண்டிதராகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், நீண்டகாலம் புத்திர பாக்கியம் இல்லாதிருந்த அன்பர் அச்சுதகளப்பாளரின் குறை தீருமாறு தேவாரப் பதிகங்களையே அருளாணையாகக் கொண்டு சுவடியில் கயிறு சார்த்தப் பார்க்க,

'பேயடையா பிரிவெய்தும்
பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர்
ஐயுற வேண்டாவொன்றும்

வேயனதோளுமை பங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர் தம்மைத்
தோயாவாந் தீவினையே'

என்ற சம்பந்தர் தேவாரப் பாடல், கயிற்றில் பட்டுத் தோன்ற, அச்சுத களப்பாளரை நோக்கி 'திருவெண்காட்டு முக்குளநீரில் நீராடி நியமத்துடன் சுவேதனப் பெருமானை வழிபட்டு வரும்படிச் சொல்ல, அதன்படியே அச்சுத களப்பாளர் ஒழுகி வந்தமையால் மெய்கண்டதேவர் அவருக்குத் திருமகனாராகத் தோன்றினார்'' என்று வரலாற்றுச் செய்திகள் எடுத்துரைக்கின்றன. இதுவன்றியும் அருள்நந்தி சிவாசாரியர் 'சிவஞான சித்தியார்' 'இருபா இருபஃது' ஆகிய சிவாகமப் பொருள் பொதிந்த சித்தாந்த சாத்திர தத்துவ நூல்களை இனிய செந்தமிழ் மொழியிலேயே இயற்றியதோடு, தமது செய்யுட்களிலே தேவார திருவாசகங்களிலே வரும் அழகிய சொற்றொடர்களைப் பொருத்தமாக எடுத்தாளுகின்றார். இதிலிருந்தும் அவரது தமிழன்பையும் ஆர்வத்தையும் சைவச் சான்றோர்கள் நன்கு உணரலாம்.

சிதம்பரம் நடராச மூர்த்தியை வழிபாடு செய்யும் தீட்சிதர் மரபில் வந்த உமாபதி சிவாசாரியர், தமிழும் சைவமும் தழைத்து விளங்குமாறு செய்த தொண்டுகள் ஏராளம். சித்தாந்த அஷ்டகம் எனப் பெயரிய சிவப்பிரகாசம் முதலிய எட்டுவகைச் சாத்திர நூல்களையும், திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம் முதலிய வரலாற்று நூல்களையும் நம்மனோர் உணருமாறு நல்ல தமிழில் இயற்றி வழங்கியுள்ளார்கள்.

இவற்றினையெல்லாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால், சைவநெறி உலகில் பெருகச் செந்தமிழையே பெரியோர்கள் வழியாகக் கொண்டனர் என்பது நன்கு விளங்குகின்றதன்றோ? எனவே சிவாசாரியர்கள் சிவாகம நெறிகளை நன்குணர்ந்து அதற்கேற்பத் தமிழ் வேத வழக்கங்களைக் கடைபிடித்து, தமிழ் அருச்சனைகள் திருக்கோயில்களில் பெருகி வளரும்படி செய்வார்களாக!

தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!


சூரியஅங்கரனால் விசிறியப்பட்ட கீசகன், தன் உடல காயங்கள் ஆறியதும் வரதசாரிணியைத் தேடி அவள் மாளிகைக்கு வருகிறான்.
பார்த்தாயா நீ! பாராளும் பார்த்திபனே அஞ்சும் என் வீர பிரதாபத்தை? உன் காவல் கந்தர்வர்களும் உன்னைக் காக்க வராத போது, அவர்களை நீ நம்பலாமா?
சித்திர பாரதம்
கவ: செவ்வேள்
ப: MN Raja
என் இதய சிம்மாசனத்தில் உனை வைத்துப் பூசிக்கிறேன். பேரழகுப் பெட்டகமே! என் இச்சைக்கு இனியாகிலும் நீ இணங்கி விடு!
கீசகனின் மோக வலையில் வீழ்ந்து விட்டவள் போல் தானும் நடிக்கிறாள் விரதசாரிணி.
ஆம் அரசே! எனைக் கந்தர்வர்கள் கைவிட்டு விட்டதாகவே உணர்கிறேன். இனி அவர்களை நான் நம்பியிருக்கப் போவதில்லை. இன்றிரவு வசந்த மாளிகைக்கு வாருங்கள். அங்கு நாம்...
இருப்போம்.. இருப்போம் உல்லாசமாக இருப்போம்
உற்சாகத்துடன் கீசகன் புறப்பட்டுச் செல்ல பலாயனனிடம் சென்று கீசகனின் செய்தியைக் கூறுகிறாள் விரதசாரணி
ஊர் அடங்கிய இரவின் முதல் ஜாமத்தில் வரதசாரிணி வந்து காத்திருப்பாள் என வசந்த மண்டபம் நோக்கி ஆவலுடன் விரைந்து வருகிறான் கீசகன். முகத்தைக் காட்டாமலே, வெட்கத்துடன் விலகிச் செல்ல "ஏன் கண்ணே என்ன வெட்கம்? இங்கு நம்மைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்" என்றான் கீசகன்.
வா பக்கம் வா! உன் சுந்தர முகத்தைக் காட்டி என் மையல் தீர வந்து என்னைக் கட்டிக் கொள்.


விரதசாரணி போல் வடிவம் பூண்ட பலாயனை வீமனை கீசகன் நெருங்கிச் சென்று கைகளைப் பிடிக்கத் தன் மெய்யான தோற்றத்தைக் காட்டும் பயாயண வீமன் கீசகனை அப்படியே தூக்கிக் கர கரவென சுழற்றித் தரையில் போட்டுத் துவைக்கிறான்.
பரதார யோகம் கொண்ட காமப்பிசாசே! இந்தா முத்தம் பெற்றுக் கொள்!
கீசகன் முகத்தில் மாறி மாறிக் குத்துகிறான் வீமன். வீமனின் கை நகங்கள் கிழிக்க கீசகனின் முகம் எங்கும் இரத்தம் பொங்கி வழிகிறது
இவன் விரதசாரிணியின் காவல் கந்தர்வர்களில் ஒருவனோ?
கீசகனும் தன்னைச் சமாளித்துக் கொண்டவனாய் வீமனது வாயைத் தன் இரு கைகொண்டு பிளக்க, கீசகனைத் தன் பற்களால் கடித்து, மலை போல் மோதுகிறான்
தான் அடக்கி வைத்திருக்கும் ஆத்திரமெல்லாம் தீரும்படியாக வீமன், கீசகனின் மார்பை ஒடித்து இரு கைகளையும், கால்களையும் ஒடித்து கீசகனின் உயிரைப் பறித்து அவன் உடலை ஒரு சதைப்பிண்டம் போல் சிதைத்து விடுகிறான்.
துரோபதையின் கால்களில் கீசகனின் சதைப் பிண்டத்தைப் போட்டு "தேவி! உனக்கு ஊறு செய்பவர் யாவர் ஆயினும் அவருக்கு நேரும் கதி இதுதான்" என்று சிம்மகர்ஜனை செய்கிறான் வீமன்.

# ஆறுமுகசிவம்

**'சித்தாந்த செல்வர்'**
**பேராசிரியர் டாக்டர் ப. இராமன், எம்.ஏ., பிஎச்.டி.**

சூரபன்மன் 1008 அண்டங்களையும் 108 யுகங்கள் ஆள வரம்பெற்றான். ஆணவத்தின் வடிவமான அவன் மும்மூர்த்திகள் உள்ளிட்ட தேவர்களுக்கெல்லாம் துன்பம் இழைத்து வந்தான். தேவலோகத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இந்திரன் மகன் சயந்தனையும் தேவர்களையும் வீரமகேந்திரத்தில் சிறை வைத்தான். சூரனை அழித்துத் தம்மைக் காத்தருளும்படி சிவபெருமானைத் தேவர்கள் தொழுது வேண்டினார்கள். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுச் சிவபெருமான் தமக்கு வெளிப்படையாகவுள்ள ஐந்து முகங்களுடன் இரகசியமாகப் புலப்படாமல் சத்திவடிவாகவுள்ள அதோமுகத்தையும் சேர்த்துக் கொண்டு ஆறுமுகங்களுடன் விளங்கி அவற்றிலிருந்து ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தார். அவற்றை வாயுபகவானும் அக்கினி பகவானும் தாங்கிச் சென்று கங்கையில் விடுமாறு கட்டளையிட்டார். அவர்களும் மாறி மாறித் தாங்கிச் சென்று கங்கையில் சேர்த்தனர். கங்கை அவற்றைத் தாங்கிச் சென்று சரவணப் பொய்கையில் விடுத்தாள். அங்கு அந்தத் தீப்பொறிகள் ஆறும் தாமரை மலர்மீது ஆறுதிருமுகங்களுடனும் பன்னிரு திருக்கைகளுடனும் செம்பொன்மேனித் திருமேனி கொண்டு வீற்றிருந்தன. இவ்வாறு சூரனை மாய்ப்பதற்குச் சிவபெருமானே ஆறுமுகச் சேயாய் வடிவு கொண்டார்.

''வாயு செஞ்சுடர் தாங்கு மாசுடர்கள்
நாய கங்கையி னாண லோடையிலே
மேய பங்கய வீயி லாறுமுகச்
சேய னாகிய தேவர் தூவினர்பூ. (ஸ்ரீமத் குமாரசுவாமியம்)

எனச் சுவாமிகள் கூறுவர்.

அருவமாயும், உருவமாயும், அருவுருவமாயும், ஏகனாயும், அநேகனாயும், பலப்பல வடிவங்களை எடுத்துக் கொள்ளும் பரப்பிரமமே இக் குழந்தை வடிவில் தோன்றியது. மறைகளின் முடிவினாலும், வாக்கினாலும், மனத்தினாலும் அறியமுடியாத அப்பிரமம், உலகம் உய்தற் பொருட்டுச் சரவணப் பொய்கையில் வந்து உதித்தது எனக் கச்சியப்பர் கூறுவார். பரப்பிரமத்தின் ஆறு குணங்களையுமே ஆறு திருமுகமாகக் கொண்டான். இவ்வாறு கொண்டு தோன்றியது உயிர்களுக்கு அருள்மாரி பொழிதற் பொருட்டே என்பதும் அவர் வாக்காகும்.

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்க ஒணாமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றிடு நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந்து அருளினானே.

ஏவர்தம் பாலு மின்றி எல்லைதீர் அமலற் குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்த தென்ன
பூவியல் சரவணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகம் கொண்டா னன்றே.

ஆதலால் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளு மன்றே.

(கந்தபுராணம்)

கச்சியப்ப முனிவர் கருத்துப்படியே பல அருளாளர்கள் கருத்துக்களும் அமைந்துள்ளன.

திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில், திருவம்பலத்தில் நடஞ் செய்யும் அண்ணலே ''ஆறுமுகத்தில் அதிபதி நான் என்று' கூறுவதாகவும் வந்துள்ளது காண்க. ''ஐந்துமுகத்தோடு அதோமுகமும் தந்து, திருமுகங்கள் ஆறாகி'' எனக் கந்தர்கலிவெண்பாவும் கூறும். ''தூவி மாமயில் ஊர்பவன் சுடர்மதி அணிந்தோன், தேவயானையே திருந்திழை உமையவளாமால்'' என இலிங்கபுராணம், மயில்வாகனன் தான் பிறைசூடிய சிவபெருமான் எனவும், தெய்வயானையே உமையம்மை என்றும் வெளிப்படையாகவே கூறுகின்றது. 'அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்ட வந்த, செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ' எனத் தாயுமான சுவாமிகளும் கூறுவர். 'தனக்குத்தானே மகனாகிய தத்துவன்' எனத் தணிகைப்புராணம் கூறும். சூரன் மார்பைப் பிளந்த வேலிறைவன் திருவேரகத்தில் 'வல்லியைக் கலந்தே, சீரகம் பெற நின்றனன் அவன் சதா சிவனே' எனச் சுசீந்திரத் தலபுராணம் கூறும்.



ஸாட்சாத் பரசிவோஸ்மாகம் கர்த்தா நேதாச சங்கர:
ஷண்முகாக்யாம் க்ருத்வா தேவாந்ரட்சிது மாகத:

என ஸ்காந்த மகாபுராணம் கூறும். இதன் பொருளாவது 'தேவர்களாகிய நம் கருத்தாவும் நம்மை நடத்துவோனும் சுகம் நல்குவோனுமாகிய 'சாட்சாது பரமசிவனே தேவர்களைப் புரந்தருள் பொருட்டுச் சுயமாகவே ஆறுமுகன் என்னும் பெயரைத் தரித்துக் கொண்டு எழுந்தருளினன் என்று விஷ்ணு மூர்த்தி இந்திரனுக்கு எடுத்துரைத்தார்'', என்பதாம். மேற்படிப் புராணமே, சிவபெருமான் உமாதேவியை நோக்கிக் கூறுவதாகப் பின்வரும் செய்தியைக் கூறும்:

''யான்நிட்கள பூரண சிவன்; நீ அழிவிலாச்சத்தி; நாம் இருவரும் பகுதியும் விகுதியும் போலவும், சொல்லும் பொருளும் போலவும் பிரிப்பில் பொருளாய் மதிக்கவுள்ளோம். அங்ஙனம் நீ சொல்லும யான் பொருளும், நீ சகமும் யான் பதியுமென ஆவோம். யான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழிற்கதிபனும் ஐம் முகமுடையனுமாகிய சதாசிவன். நீ பலவாறாக இருப்பினும் ஒரு முகமுடைய பரமேசுவரி. குமாரன் உனது சுவரூபத்தையும் எனது சுவரூபத்தையும் கொண்டுளான். ஆகையால் அவன் ஆறுமுகன் எனப்படுகின்றனன். இவன் பிரபஞ்ச காரியார்த்தம் ஐந்தொழில்களையும் விளையாட்டாகவே புரியும் தலைவனாயுளன்" எனக்கூறுவார்.

''ஆறுமுகனுக்கு, ஒருமுகனுக்கு, • பினாக பாணிக்குப் பன்னிருதோள்களையுடையானுக்குச் சௌமிய குணமுடையானுக்குத் தன்னை அருசசிப்போர் எண்ணத்தை நிறைவேற்றுவோனுக்கு உமாசங்கரர் ஆசைக்குரிய முக்கிய மூர்த்திக்கு 'அந்தமிலா மூர்த்திக்கு அளவிலா அற்புத ஏதுவானவனுக்கு நமஸ்காரம். உலகைக் காக்கும் பொருட்டு இருதிற மூர்த்திகளாயிருக்கின்ற ஈசனைச் சரணடைகின்றேன்'' எனப் பிரகஸ்பதிபகவான் அறுமுகனைச் சரணடைந்த செய்தியும் மேற்படிப் புராணத்தில் கூறப்படுகின்றது.

ஏழுபாதாள உலகங்கள் திருவடியிலும் ஏழுதீவுகளின் புடவி கணைக்காலிலும், ஏழு கடல்கள் உடுத்த உடையிலும், திசைகள் புயங்களிலும் ஆகாயம் நாபியிலும், திபு என்னும் சுவர்க்கம் சென்னியிலும், சந்திரன் சூரியன் அங்கி என்பன அழகிய மூன்று கண்களிலும் மேலாய மேகங்கள் கேசங்களிலும், விண்மீன்கள் அக்கேசாலங்கிருத மலர்நிலைகளிலும், சிவபரம் பொருள் ஆன்மாவிலும், சிவசத்தியாகிய கௌரி பதியிலும், விட்டுணுவாகிய சனார்த்தனன் இடப்பாரிசத்திலும், பகவானாகிய பிரமன் வலப்பாரிசத்திலும், பாரதி வேதவாக்கிலும், இலச்குமி திருநிலையிலும், பிராணன் முதலிய

டத்துவாயுவும் வாயுநிலையிலும், காலாக்கினி ருத்திரன் சிற்றநிலையிலும், அக்கினிதேவன் சாடராக்கினியிலும் அனந்தாதி மாநாகங்கள் நூபுரம் முதலிய காலணிகளிலும், ஓமதியனைத்தும் உரோமங்களிலும், அண்ட கோடிகளெல்லாம் அவ்வுரோமங்களின் மேய பேன்முட்டை நிலையிலுமாகக் காணப்பட்டுச் சுடர்கோடி பகல் கதிர் எனக், குளிர்கோடி இராக்கதிர் என மிளிர்கோடி காலாக்கினியெனப் பிரகாசியா நின்ற தனது பரம அற்புத உறையுளான அப் பரமேசுர வடிவினை அளப்பறு மகிமையுடைய அரகுமாரனாகிய சுப்பிரமணியன் காட்டியருளினன். அவ்வடிவின் ஒளியினால் தரிசித்த தேவர்களுடைய விழிகள் கணப்போது பார்வையின்றி மாழ்கின. சுரர்களாகிய பிரம விட்டுணுக்கள் முதலிய தேவசிரேட்டர் அனைவரும் கந்தபிரானாகிய அவனுடைய அளவிலாத் தேஜோ மண்டலத்தில் ஆயிரத்தில் ஓரமிச அளவே அறிந்தனர்.

இவ்வாறு ஆயிரத்தில் ஓரமிசத்தை அவனருளால் காணும் திவ்விய விழிகளைப் பெற்ற விட்டுணு முதலிய தேவர்கள் முழந்தாள் வரையிலுமுள்ள உரோமங்களுள் ஒரோவொன்றிலும் ஆயிரக்கணக்கான பல கோடி பேன்முட்டைகள் அடுக்கடுக்காய்ச் செறிவுற்றிருத்தலையும், பிரமாண்ட கோடிகளாம் அம்முட்டைகளுள் உலகங்களையும் அவற்றுள் அதனை அதனைச் சார்ந்த இறப்பு நிகழ்வு வரவு என்னும் காலங்கட்குரிய பல்புவனங்களையும் மன்பதையினையும், பிரமவிட்டுணுக்கள் முதலிய தேவர்களையும் அவ்வவ் ஆவரணங்களையும் கண்ணுற்று ஆ! ஆ! இவையென்னே! இஃதென்னே!!'' என இறும்பூதெய்திப் பெரிதும் அஞ்சி நின்று வேத வாக்கியங்களால் எண்ணிலாத தோத்திரங்களைச் செய்து வணங்கினார்கள் என்றும் வரு விவரங்களானே குமார பரத்துவம் நாட்டப்படுவதாயிற்று. யாவையும் அடக்கிக் கொண்ட இப்பாரமேசுவர வடிவில் பிரமனும் விட்டுணுவும் காலாக்கினருத்திரனும் அடங்கி நிற்றலின், திரிமூர்த்திகளினும் மேம்பட்ட சதுர்த்தப் பொருள் குமாரன் என்டதூஉம், கூறிப்போந்த பாரமேசுவர வடிவிற்கு ஆன்மா சிவமென்றமையின் குமாரன் சிவன் என்பதும் வச்சிரத்தாணுவாய் நாட்டப்படுவவாயின என்க.'' எனச் சுவாமிகள் (திருப்பா உரை.ப. 31) மேற்படிப் புராணச் சான்றால் நிறுவியுள்ளார்கள்.

மேலும் முருகப்பெருமான். சரவணப் பொய்கையில் குழந்தைத் திருவிளையாடல் புரிந்த சிறப்பினையும் மேற்படிப் புராணம் கூறும்; ஒரு குழவி யோகநித்திரை செய்தது. ஒன்று அடிக்கடி அனந்தமாக முறுவலித்தது. ஒன்று பெரிதும் அழுதது. ஒன்று பெருந்தொனி எழுப்பியது. ஒன்று நகைத்துக்கொண்டும் கலுழ்ந்து கொண்டுமிருந்தது. ஒன்று காற் பெருவிரலைச் சுவைத்துக்கொண்டமுதது. ஒன்று கையிரண்டையும் கூப்பி வாயில் வைத்துக் கொண்டது. ஒன்று மார்பினால் நகர்ந்தது. அடுத்த ஒரு கணப்போதிற்குள் ஒன்று அடிக்கடி ஓடுவதாயிற்று. ஒன்று நடத்தலையே செய்வதாயிற்று. ஒன்று ஒரு தாளால் தவளைப் பாய்த்தெனத் தத்தித்தத்திச் சென்றது. ஒன்று முழந்தாள் நிலம்படியத் தவழ்ந்தது. ஒன்று இரண்டு மூன்றடி நடந்து வீழ்ந்தது. ஒன்று சிறிது தூரம் சென்று சமபூமியினை அடைந்தது. ஒன்று தாய் கரம்பற்றிச் சம பூமி குறுகிற்று. ஒன்று வீழ்தலும் எழலுமாய்த் திரிந்தது. ஒன்று தம்முள் மற்றொரு குழவியோடு மல்லரைப் போலவும் யாட்டைப் போலவும் நெற்றியால் முட்டிச் கொல்வதாயிற்று. பின்றை அவ்விரு குழவிகளும் மற்போர் புரியலுற்றன. இவ்விதப் பல பாலலீலைகளைப் பார்த்த விட்டுணு முதலிய தேவர்கள்— நாம் ஒரு குமாரனையளிக்குமாறு ஈசனை இரந்து நின்றோம். ஈண்டெத்தனையோ குமாரர்கள் வந்துளார்கள். என்னென்னவோ திருவிளையாடல்களும் புரிகிறார்கள். இனி இவ்வுலகிற்கு எச்சௌக்கியம் எய்தாது போகும் எனக் கழிபேருவகையுற்றார்கள்.'' இதற்கு மேலும் அனந்தவடிவங்கள் கொடு அனந்தபால லீலைகளை எல்லா உலகங்களிலும் இழைத்த இளம் பெருமான், தலையெங்கும் நரைத்தும் கண் காதுகள் மங்குதலுற்றுக் கரதண்டம் ஒன்று ஊன்றி வரும் ஒருகிழவன் போலாகித் தேவர் குடியிலாது பாழ்த்துக் கிடக்கின்ற பட்டணங்களை முன்னிருந்தாங்கு ஆக்கிக் காத்தலில் கவலை கொண்டவன் எனவும் ஆங்குத் திரிதரா நின்றனன்'' என்று கூறிச்சேறலின் அறியப்படுகிறது. வினோதத்தினும் வினோதமாய இந்நிறத் திருவிளையாடல்களை எந்நரகுமாரன் இழைத்தனன்? எச்சுரகுமாரன் செய்தனன்? திருவருள் அவாவும் திருவுடையீர்! கூறுமின். இவ்விளையாடல்களுள் மிக்க கிழவனாயினமையை நோக்குழி, முதல்வன, சுத்தமாயை வாயிலாகப் பல வடிவங்கள் கோடல் உண்டென்டது போதரப் பின்னறச் காட்டப்படு சுருதிகள் கூறியவாறே குமரநாதன் கொண்ட வடிவங்களோ பல; அப்பலவும் ஒவ்வோரற்புத மூர்த்தமாக எண்ணப்படுவனவேயன்றித் தோன்றல், வளர்தல், திரிதல், (பரிணாமம்) முதலிய எனப்படூஉம் ஒன்றின் விகாரங்களாக எண்ணப்படா என்னும் தீர்வையும் அவ்வற்புதச் செயல்கள்-கற்றுக் கொண்டு செய்யும் வித்தைகளுள் வைத்தெண்ணப்படா ஈசுரப் பிரபாவ குணங்களாமென்பதும் கொளக்கிடக்கின்றமையில் சூரபன்மனைப் போருக்கு அழைத்து இழைத்த பெரும் போரும் வரப்பிரசாத வலியோடு பொருது வெற்றிகொண்ட ஒரு விளையாட்டாகவே கொள்ளப்படுமேரா. இஃதிவ்வாறாக என்று எண்ணு மாத்திரையே எல்லாம் செய்யவல்லான்'' (சாந்தோக்கியம்) என்பதாலும், ஷண்முக ஸஹஸ்ரநாமத்துள் 'ஸத்யஸங்கல்ப:' எனும் ஒரு பெயரும் இருப்பதாலும் அவன் எதனையும் விளையாட்டாகவே செய்யத்தக்கான் என்பது விளங்கும் அன்றோ!

இதனால் ஐம்முகச்சிவனையும் ஆறுமுகனையும் வேறுபடுத்திக் கூறல் பிழையாகும் என உணர்தல் வேண்டும். நிகண்டுகளும் சிவனுடைய பெயர்களில் பிரமம் என்று கூறாது போனாலும், சிவன், மகாதேவன் எனவும்

அறுமுகன் பெயர்களால் சுப்பிரமண்யன் எனும் பெயரில் ப்ரம்ம எனவும் நிற்பதாயிற்று (சுவாமிகளின் திருப்பா உரை: பக். 33-37) சிலர் சிவன்கட்டோன்றினமையின் படைக்கலத் தரசு (வேற்படை) பெற்றமையின் சிவனுக்கு குமாரன் சமமாகான்; சிவன் பெரியான்என்றும் சிலர் பிரதிட்டா கலையிலுள்ள 56 புவனங் களுள் (அவ்வியத்தப் பிரகிருதியிலுள்ள) ஒன்றே கௌமாரம் என இருத்தலிற் குமாரன் தாழ் நிலைத் தெய்வம் எனக் கூறக் காண்கின்றனம். குணருத்திரமூர்த்தி பிரயதேவனது நெற்றி யினின்று தோன்றினன் என முன்னையநூல் கூறுவதுபோல், குமாரனும் உமாபதியின நெற்றிக் கண்களினின்றும் வந்தனன்; அதனால் இழிவு யாது? படைக்கலத்தரசை ஐம்முகச் சிவம் அறுமுகப் பெருமானுக்கு அளித்தமை அப்படைக்கலத்தரசிற்குரிய பரமன் வந்து அதனைப் பெறும் வரையிலும் அது காக்கும் காரியம் ஐம்முகப் பெருமான் மாட்டிருந்த தென்பதையே உறுதிப்படுத்தும். அப்படைக் கலத்தரசு கொண்டு சூரபன்மனைக் கொல்ல வில்லை. பிற தேவர்பால் கொடுத்தும் அது புரிநதிலனாகலின். இங்ஙனம் யாதிழிவு?'' எனச் சுவாமிகள் ஸ்காந்த மகாபுராணத்தைச் சான்று காட்டித் தம் கொள்கையை நிறுவி யுள்ளார்கள்.

''காங்கேய கார்த்திகேயாதி நாமபி:
பரமேச்வர:
நிட்ச்த்யதே முநிச்ரேஷ்டைர்
முடாபிந்நதயாவிது''

எனவரும் ஸ்காந்தமகாபுராண அடிகள், ''காங்கேயன் கார்த்திகேயன் முதலிய திருப் பெயர்கட்குப் பரமேசுவரன் என்பதுதான் பொருள் என்பது முனிச்சிரேட்டர் கொள்கை: மடவோர்தாம் பேதம் பேசுவர் என்று கூறுவ தும் காண்க..

எந்தவிதக் கலைகளுக்கும் பூதங்களுக்குப் பிரமனுக்கும் ஈசன் என்று சொல்லத்தக்க முதற் பொருளான பரப்பிரமம் சதாசிவன் ஓம் என வேதங்கள் கூறும். ஒரு முறையே அவை கூறும். ஆனால் 'சுப்பிரமணியம் ஓம் என மும்முறை கூறும் எனக் காஞ்சிப்புராணம் கூறுவதும் காண்க.

''எக்கலைக்கும் பூதங்கள் எவற்றினுக்கும்
பிரமனுக்கும ஈசன் என்னத்
தக்க முதல் பரப்பிரமம் சதாசிவனோம்
என வேதம் சாற்றுமல்லால்
முக்கனல் சூழ் வேள்வியிற் சுப்பிரமணியன்
ஓம் என முக்காற்கூறும்
இக்கருத்தையறியானை எவ்வாறு
விடுவிப்பது இயம்பு மின்னோ''
(காஞ்சிப்புராணம்)

இது தேவர்களை நோக்கி உமாநாதன் உரைத் தது:

''துப்புரவு நாடுயிரே சுப்பிரமணியத்தின்மேல் எப்பிரமம் உள்ளது இயம்பு.'' என்பதும்

''சிவம் சத்திக்கு அன்னியமாய்ச் சேயை
உரைப்போர்
பவம்பற்றிப் பாசறை கொள்வர்'' என்பதும்

''நன்னாரணஞ்சொலல்போனற்குமர நானேநீ
என்றான் பரம சிவனே''
என்பதும் சுவாமிகள் வாக்கு.

குமரனைக் கௌமார புவனம் எனும் தாழ்புவனத்திலுள்ளவன் எனவும் கூறுவர். சிவாகமங்களுள ஒன்றான சிவதருமோத்தர ஆகமத்தில் குமாரன் உலகம் பிரகிருதிக்கு மேலுள்ள அப்பிராகிருத பரசிவலோகத்தின மேலுள்ள மகேச தத்துவத்தில் வடிவேல் ஏந்தும் குகேசன் உலகம் உள்ளது எனக்கூறும் எனச் சுவாமிகள் கௌமார புவனத்தார் கூற்றை மறுப்பர்.

''சிவாக மத்தைச் சேர்ந்த தாய
சிவதரு மோத்தரஞ் செப்பு மாறு
பிரகிரு தியின்மேற் பிறங்கப் பிராகிருத
பரசிவ லோகத் தின்மேற் படரும்
மகேசதத் தவத்தில் வடிவேல் தாங்கு
குகேச னுலகாக் குறிக்குங் குமாரன்
உலக மதன்மேல் ஓகைசால் சத்தி
உலகம் அதன்மேல் உயர்சிவ லோகம்
உளவவ் வுயர்சிவ லோக முறுநர்
விளைபுவி தோன்றா நெனக்குக வேளே
பொதிய முனியெனும் புனிதற் கோதினான்
அதனாற் குமாரன் கதிகீழ் நிலையெனில்
கூறுது நீயிர் தேறு மாறதை
ஈறறு குமார னூறறு சிவத்தைச்
சத்தியை நீங்காச் சச்சிதா னந்த
வித்து வென்னும் சத்திய முணரா
துருவகை யானே பிரிவினை செய்யூப்
பரவு முயிர்கண் மருவு கதிப்பொருட்
டச்சே யுலகும் அச்சிவை யுலகும்
மிச்சை யின்றி விளம்பப் படுமவை
போலச் சிவவுருப் போற்று நர்க்கும்
மேலுரைத் திட்ட கோலவப் பிராகிருத
சிவலோ கப்பயன் தெரிக்கப் படுமால்
இவையிழுக் கென்றறி நவையறு புந்தியர்
உருவான் மூன்றும் பேத முண்மையில்
ஒருமை நிலையென் றுய்த்தினி தோர்ந்தே
போதமி னிட்டையிற் பேதமில் தரிசனம்

ஆதலைச் சேயெனா வறிபவ ரப்பொருள்
ஆக விளங்கி யழிவுதிப் பென்னும்
தோக மிகந்துய் வாரே சுருதி
பெரிய சிவஞ்சுப் பிரமணி யப்பொருள்
ஒருசிறி தும்பே தம்இலை யுணரின்
எனலா னெந்தை யிருங்குத் தேவை
நனிதொழு துய்திர் ஞாலித் தீரே.''
(திருவலங். க. 2.)

அறுமுகச்சிவம் வேறு ஐந்துமுகச் சிவம் வேறு எனக் கருதுவோர் அறியாமையினால் அவ்வாறு எண்ண நேர்ந்தது என்றுணர்க எனச் சுவாமிகள் இடித்துக் கூறுவர். அறு முகனைச் சிவபெருமானுக்குச் சேய் எனக்கூறல் வெறும் உபசாரமே எனவும் சுவாமிகள் இயம்புவர். சுவாமிகள் கருத்தை அருணகிரி நாதப் பெருமானும் ஏற்றுள்ளதைத் திருப்புக ழும் உணர்த்தும்.

# சோழர் காலத்தில் சமய இலக்கியங்களின் வளர்ச்சி

டாக்டர் பொற்கோ

**பேராசிரியர் — தலைவர்.**
**தமிழ் இலக்கிய வளர்ச்சித்துறை,**
**சென்னைப் பல்கலைக் கழகம்.**

பிற்காலச் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் பல இன்றியமையாத நிகழ்ச்சிகளைச் சந்தித்திருக்கிறது. குறிப்பிடத்தக்க பல வளர்ச்சிகளையும்பெற்றிருக்கிறது. தமிழக வரலாற்றை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டுமானால் சோழர்காலத் தமிழகத்தை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

## பிற்காலச் சோழர்களின் ஆட்சிக் காலம்:

ஏறக்குறைய கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பிற்காலச் சோழர்களின் ஆட்சிக் காலம் நிறைவு பெறுகிறது என்று சொல்லலாம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்த பரகேசரி விஜயாலய சோழன் காலததில் தொடங்கிப் பிற்காலச் சோழர்களின் ஆட்சிக் காலம் கி.பி. 13 நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த மூன்றாம் இராசேந்திரன் காலத்தோடு நிறைவு பெறுகிறது. ஏறக்குறைய 500 ஆண்டுக் காலம் பிற்காலச் சோழர்களின் ஆட்சிக் காலம் என்று கருதத்தக்கதாக அமைகிறது.


## சோழர் காலத்துக்கு முந்தைய நிலை:

வரகுண பாண்டியனை எதிர்த்துப் போரிட்ட பல்லவ மன்னனுக்கு ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆதித்த சோழன் உதவியதன் பயனாக ஆதித்த சோழன் தன்னுடைய ஆட்சியை மேம்படுத்துகின்ற வாய்ப்பினைப் பெறுகிறான். திருப்புறம்பியத்தில் நடந்த போர் சோழப் பேரரசின் உருவாக்கத்துக்கு ஒரு தொடக்கமாக அமைகிறது. இதிலிருந்து வளர்ச்சிப் பெற்ற சோழப் பேரரசு இராசேந்திர சோழன் காலத்தில் உச்ச நிலையை அடைகிறது. அதன் பிறகு 13-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சோழப் பேரரசு வீழ்ச்சியடைந்து விடுகிறது. சோழப் பேரரசின் உருவாக்கத்துக்கு முன்பு பல்லவர்கள் தமிழகத்தில் செல்வாக்கோடு ஆட்சி செலுத்தி வந்திருக்கிறார்கள். இவர்கள் காலத்தில் காஞ்சி மாநகரம் செல்வாக்கு மிகுந்த நகரமாக விளங்கியது. கலை, கல்வி ஆகியவற்றுக்கெல்லாம் காஞ்சி மாநகரமே சிறந்த இடமாகக் கருதப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் செல்வாக்கு பெற்று விளங்கிய பல்லவ அரசு ஒன்பதாம் நூற்றாண்டில் மறைய தொடங்குகிறது. பல்லவ அரசர்கள் ஓவியக் கலையையும் சிற்பக் கலையையும் சிறப்பாக வளர்த்தவர்கள்; பல்வேறு கற்கோயில்களை அழகாக உருவாக்கியவர்கள். இவர்கள் மொழி வளர்ச்சியிலும் இலக்கிய வளர்ச்சியிலும் அக்கறை காட்டியவர்கள். இவர்கள் காலத்தில் அடிக்கடிப் போர் நிகழ்ந்து மக்கள் அல்லல் பட்டிருக்கிறார்கள். அரசர்களுக்கு இடையே நடந்த போரோடு மட்டுமல்லாமல் இடைவிடாத சமயப் பூசல்களும் இவர்கள் காலத்தில் நடந்திருக்கின்றன என்று அறிகிறோம். சமயப் பூசல்கள் எல்லாம் ஓரளவுக்கு அடங்கிச் சைவ சமயம் மேலோங்கத் தொடங்கிய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு என்று சொன்னால் குறையாகாது.

காஞ்சி மாநகரம் சங்க காலத்திலிருந்தே சிறப்பு பெற்ற நகரமாக விளங்கி வந்திருக்கிறது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பல்லவர்கள் செல்வாக்கு பெற்ற கால கட்டத்தில் காஞ்சி மாநகருக்கு மேலும் செல்வாக்கு வளர்ந்தது. கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தைய கால கட்டத்தில் முத்தரையர்கள் தஞ்சையை ஆண்டு வந்தார்கள். தஞ்சை மாநகரம் இவர்களுடைய ஆட்சியில் இருந்த பொழுது பெரும்பாலான பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் தமிழகத்தில் உருவாகியிருக்கின்றன. வரலாற்று ஆசிரியர்கள் இருண்ட காலம் என்று குறிப்பிடுகின்ற இந்தக் கால கட்டத்தில்தான் தமிழகத்தில் பெரும்பாலான பதினெண்கீழ்க் கணக்கு நூல்களும் திருமந்திரம் பெருங்கதை போன்ற நூல்களும் தோன்றியிருக்கின்றன என்று கருதுவது தவறாகாது.

பல்லவர்களின் ஆட்சிக் காலத்தில் தன்னுடைய செல்வாக்கை இழந்து வந்த தஞ்சை, சோழர்களின் ஆட்சிக் காலத்தில் மீண்டும் அந்தச் செலவாக்கைப்புதுப்பித்துக்கொண்டது. விசயாலயன் காலத்தில் தொடங்கி ஆதித்த சோழன், முதலாம் பராந்தகன், இரண்டாம் பராந்தகன், இராஜராஜன், இராசேந்திரன் முதலான சோழப் பேரரசர்களின் இடைவிடாத முயற்சியால் வளர்த்து உருவாக்கப்பட்ட சோழப் பேரரசு, இராஜாதி ராஜன், குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜேந்திரன் முதலான அரசர்களால் பாதுகாக்கப்பட்டுப் போற்றப்பட்டது. இறுதியில், எல்லாப் பேரரசுக்கும்



உள்ள சரிவும் வீழ்ச்சியும் சோழப் பேரசுக்கும் வந்து சேர்ந்தது. மூன்றாம் இராஜராஜன் கோப்பெருஞ்சிங்கன் என்ற ஒரு சிற்றரசனால்சிறைப்பிடிக்கப்படுகிறான். அவனுக்குப் பிறகு வந்த மூன்றாம் இராசேந்திரனுடன் சோழப் பேரரசு முடிவுற்றுவிடுகிறது. 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சடையவர்மன சுந்தர பாண்டியன் சோழப் பேரரசை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து நிறுத்திவிட்டான். அதன் பின் சிலகாலம் பாண்டிய அரசு வலிவும் பொலிவும் பெற்று விளங்குகிறது.

## சோழர் காலத்தில் தொழிலும், கலையும்:

இராஜராஜ சோழனும் இராஜேந்திர சோழனும் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சிகள் அவர்களுடைய ஆட்சி எல்லையை மிகப் பெரிய அளவுக்கு விரிவுபடுத்தின. இராஜேந்திர சோழனுடைய ஆட்சி வடக்கே துங்கபத்திரை முதல் தெற்கே கன்னியாகுமரி வரை பரவியிருந்தது. இலங்கையின் சில பகுதிகளும் இன்றைய இந்தோனேஷியாவின் சில பகுதிகளும் இவனுடைய ஆட்சியின் கீழ் இருந்தன. இலட்சத் தீவும் மாலத்தீவும் இந்தப் பேரரசர்களால் வெற்றி கொள்ளப்பட்டன. இன்றைய மலாயாவின் சில பகுதிகளும் நிகோபர் தீவுகளும் இந்தப் பேரரசர்களின் ஆட்சியின்கீழ் இருந்தன.

இந்த மாமன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இவர்கள் ஆட்சியை விரிவு செய்ததோடு மட்டுமல்லாமல் வெளிநாட்டுத் தொடர்பினால் இவர்களுக்கும், செல்வமும், செல்வாக்கும் வந்து சேர்ந்தன. உள்நாட்டை வளமாக்குவதில் இவர்கள் கவனம் காட்டினார்கள். இன்றைக்குப் பொன்னேரி என்று வழங்குகின்ற சோழ கங்கம் போன்ற மிகப் பெரிய ஏரிகளை வெட்டினார்கள்; ஆறுகளையும் கால்வாய்களையும் செம்மை செய்து நாடு முழுதும் நீர் வளத்தைப் பெருக்கினார்கள். பல்லவர் காலத்தில் அமைந்தது போலவே கற்கோயில்களை அமைத்துச் சிற்பக் கலையையும் கோவிலைச் சார்ந்த மற்ற கலைகளையும் வளர்த்தார்கள். அன்றைய சூழலில் எல்லாத் தொழில்களுக்கும் தாய்போல விளங்கிய உழவுத் தொழில் வளப் பெற்றதன் விளைவாக அதைச் சார்ந்த மற்ற தொழில்களும் வளம் பெற்று வளர்ந்தன. கோயில்கள் செல்வாக்கு பெற்று வளர்ந்ததன் பயனாக அவற்றைச் சார்ந்த கலைகளும் வளர்ந்தன. சமயத்தைப் பொறுத்தவரையில் சோழப் பேரரசர்கள் சைவ சமயத்தில் நாட்டம் உடையவர்களாக இருந்தாலும் சமயப் பொறை உடையவர்களாகவே விளங்கியிருக்கிறார்கள். கல்வி வளர்ச்சியிலும் கலை வளர்ச்சியிலும் நாட்டமுடைய இவர்கள் கலை வளர்ச்சிக்குக் கோயில்களில் வாய்ப்பு அளித்தார்கள். கல்வி வளர்ச்சிக்காகத் தனிப்பட்ட

நிறுவனங்கள் அமைத்து அவற்றையும் ஊக்கு வித்திருக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள எண்ணாயிரம், பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள திருபுவனை முதலான இடங்களில் மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களை நிறுவி உயர்கல்விக்கு வாய்ப்பை இவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

இவர்கள் காலத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கும் தமிழ்க் கல்விக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டதோடு வடமொழிக் கல்விக்கும் வடமொழி ஆய்வுக்கும் நிரம்ப வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திருத்தக்கதேவர், கம்பர், சேக்கிழார், ஜெயங் கொண்டார், புகழேந்தி, ஒட்டக் கூத்தர் முதலான பெரும் புலவர்கள் எல்லாம் தமிழுக்கு அரும்பணி ஆற்றியது சோழப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில்தான். இந்தக் காலத்தில்தான் அமிதசாகரர், குணசாகரர் போன்றவர்கள் தமிழ்க் கவிதைகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளைக் கண்டு யாப்புக்கு மிகச் சிறப்பான முறையில் இலக்கண நெறியை உருவாக்கினார்கள். அணியிலக்கணக் கோட்பாடுகளை உணர்ந்து தமிழுக்கு ஒரு அணியிலக்கணத்தை உருவாக்கிய தண்டியடிகள் வாழ்ந்ததும் இந்தக் காலத்தில்தான்.

சைவ சமயத் தோத்திர நூல்கள் தொகுக்கப் பெற்று இன்று வரை பாதுகாக்கப் பெறுவதற்கு மூல வித்தாக விளங்கிய நம்பியாண்டார் நம்பி வாழ்ந்தது இந்தக் காலத்தில் தான். வைணவத் தோத்திர நூல்கள் தொகுக்கப் பெற்று இன்று வரை காக்கப் பெறுவதற்குக் கருவியாக அமைந்த நாத முனிகள் வாழ்ந்ததும் இந்தக் காலத்தில்தான்.

சோழப் பேரரசின் காலத்தில் சைவ, வைணவ சமயத்தோத்திர நூல்கள் தொகுக்கப் பெற்றன. அந்த நூல்கள் தொடர்ந்து மக்கள் மத்தியில் வாழத்தக்க வகையில் அந்தத் தோத்திரங்கள் ஓதப்பெற வேண்டும் என்று சோழப் பேரரசு நிவந்தங்கள் வழங்கித் தகுந்த முறையில் அவற்றுக்கு உரிய ஏற்பாடுகள் செய்தன. சோழப் பேரரசின் காலத்தில் கம்ப இராமாயணம், பெரியபுராணம், சீவக சிந்தாமணி முதலான பெருங்காப்பியங்கள் தோன்றின. நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் முதலான இலக்கண நூல்கள்தோன்றின. இவர்கள் காலத்தில் தான் நிகண்டு போன்ற புதிய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. மொழி வளர்ச்சிக்காகவும் இலக்கிய வளர்ச்சிக்காகவும் மிகப்பெரிய அளவுக்குப் பணிகள் நடந்தது சோழப் பேரரசர்கள் காலத்தில் தான் என்றால் மிகையாகாது. இன்றைய சூழலில் நாம் எண்ணிப் பார்த்தாலும் மொழிவளர்ச்சிக்கு மிக இன்றியமையாதனவாகக் கருதப்படுவன இலக்கியம், இலக்கணம், அகராதி, இவை சோழப் பேரரசின் காலத்தில் மிகச் செழுமையாக வளர்ந்திருக்கின்றன. இந்த அளவுக்கு இலக்கியங்களும் தனிக் கவிதைத் தொகுப்பும், இலக்கணங்களும் நிகண்டுகளும் வேறு எந்தக் காலத்திலும் தோன்றவில்லை என்பதை நாம் மகிழ்ச்சியோடு நினைத்துப் பார்த்துக் குறிப்பிட வேண்டும்.

இன்றைய கலை, கல்வி, பண்பாடு ஆகிய எல்லாவற்றுக்கும் ஒரு புதிய தொடக்கம் போலச் சோழப் பேரரசு அமைந்தது என்பதை நாம் இங்கே மிகத் தெளிவாக எண்ணிப் பார்க்க வேண்டும். கி.பி. 9-ம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையிலான இந்த 500 ஆண்டுக் காலத்தில் தமிழகத்தில் சில குறைபாடுகள் இருந்திருக்கலாம். சோழப் பேரரசின் ஆட்சியினால் சில குறைகள் நேர்ந்திருக்கலாம். ஆனால் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் பொழுது ஒரு நாட்டு வளர்ச்சிக்காகவும் ஒரு சமுதாய வளர்ச்சிக்காகவும் சோழப் பேரரசு செய்திருக்கிற பணிகள் மிகப் பெரிய பணிகள். தமிழகம் மிகநன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டிய பணிகள். சோழப் பேரரசின் ஆட்சிக் காலத்தில் நேர்ந்துவிட்ட குறைகளை நாம் எண்ணிப் பார்த்து அத்தகைய குறைகள் நேராவண்ணம் களைந்து விடலாம். ஆனால் அவர்களுடைய அரும் பெரும் பணிகளைப் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் திரும்பத் திரும்ப நாம் எண்ணிப் பார்ப்பது தகும். நமக்குக் கிடைத்துள்ள இத்தகைய கடந்தகால வரலாற்றுப் பெருமை சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்குப் பயன் படும்; பயன்பட வேண்டும்.

## திருநீற்றுப் பட்டைகள்!


திருநீறு அணியும்போது முப்பட்டைகளாக இடுவதேன்?

1) புருவத்தை ஒட்டியுள்ள முதல் பட்டை உடல்சுத்தம் குறிக்கும்.

2) நடுப்பட்டை வாக்கு சுத்தம் குறிக்கும்.

3) மேல்பட்டை மனச் சுத்தம் குறிக்கும்.

—டாக்டர் தவத்திரு
சாயிமாதா சிவபிருந்தாதேவி.



கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன் [24]

வரகுண பாண்டியன் மதுரையை அரசாட்சி செய்து வந்தான். ஒரு நாள் வேட்டையாடி மதுரைக்கு நள்ளிரவில் திரும்பும் போது, வழியில் தூங்கிக் கொண்டிருந்த பிராமணன் ஒருவனைப் பாண்டியனது குதிரை மிதிக்க பிராமணன் இறந்தான். பாண்டியன் இறந்த பிராமணனின் ஈமக்கடன்களுக்கான உதவிகளைச் செய்தான். எனினும் அரசனைப் பிரமஹத்தி தோஷம் பிடித்தது. அதனை நீக்குவதற்கு அரசன் அந்தணருக்கு அமுதமளித்தும் அரசமரத்தை சுற்றியும், பசுக்களுக்கு அறுகம் புல் அளித்தும், அகமருஷண ஹோம ஜபங்கள் செய்தும் தான தருமங்கள் பல செய்தும், பஞ்சகவ்யம் அருந்தியும், தனது பழி நீங்காது வருந்தி கடைசியாகச் சோமசுந்தரப் பெருமானது கோயிலைப் பத்து தினங்களுக்கு ஆயிரத்தெட்டு முறை வலம் வந்தான். 'பெருமானே! இந்திரனுடைய பழியைத் தீர்த்தீர். மாபாதகப் செய்தவனைக் காத்தீர்! அது போல் எனை வருத்தும் பழியையும் தீர்த்தருளுவீராக'' என வேண்டினான்.

''விழியாயிரத்தோன் பழி தீர்த்தனை!
வேதியன் தன்
பழியாத மாபாதகம் தீர்த்தனை! கௌவைக்
கங்கைக்
கழியாறலைக்கும் சடையாய்! எனைத
தொட்டலைக்கும்
பழியானது தீர்த்தருள் என்று பணிந்து
வீழ்ந்தான்''

பாண்டியா! எம்மை வலம் வருகிறேன் என ஒரு அடி எடுத்து வைத்தாலும் அசுவமேத யாகம் செய்த பலன் கிட்டும். அப்படியிருக்க எம்மை தினமும் 1008 முறைகள் வலம் வந்ததற்கு மகிழ்ந்தோம். கூடிய சீக்கிரம் சோழன் உன்னுடன் போருக்கு வந்து தோற்று ஓடுவான். நீ அவனை விரட்டிக் கொண்டு எம்மையே நாம் அருச்சனை செய்யும் தலமாகிய திருவிடை மருதூரை அடைந்தால் உன் பழி தீரும்'' என்றார் இறைவன்.

''சிவபெருமான் திருவிடை மருதூரில் சோதி மகாலிங்கமாகத் தோன்றித் தன்னைத் தானே அருச்சனை புரிந்தனர். அம்மை ''இறைவரே! தேவர்கள் தங்களைப் பூசிப்பதன்றோ முறை! தங்களைத் தாங்களே பூசித்துக் கொண்டிருந்தீர்கள். இந்த லிங்கத்தில் யாரை எண்ணிப் பூசித்தீர்கள்'' எனக் கேட்க, இறைவன் ''அம்மையே! பூசித்தவனும் பூசையை ஏற்றுக் கொண்ட இறைவனும் நாமே! முனிவர்கள் நம்மைப் பூசிப்பதை மறந்தனர். அவர்கள் அறிந்து கொள்வதற்காக நம்மை நாமே பூசித்துக் கொண்டோம்'' எனக் கூறியதாகத தெரிவிக்கிறது திருவிடைமருதூர்த் தல புராணம்

ஓதும் அர்ச்சனை செய்தோனும் உகந்தது
கொண்ட தேவும்
போர்துறு கோதை வேற்கண் பொற்கொடி!
நாமே யாகும்.
ஏதுவென் நம்மை நாமே அருச்சித்தற்
கென்னில் அந்த
மாதவர் நம்மைப் பூசித்தல் மறந்தது ஈண்டு
அறிதற்காமால்'


— திருவிடை மருதூர்தலபுராணம்

அவ்வாறே சில நாட்கள் கழித்து பாண்டியன் மீது சோழன் படை எடுத்துவர, பாண்டியன் அவனை வென்று துரத்திக் கொண்டே வந்து திருவிடைமருதூரில் உள்ள பூசத்துறையில் மூழ்கி, கோயிலுக்குள் புக, கிழக்கு வாசலிலேயே பிரம்மகத்தி நின்றது. பாண்டியன் மகிழ்ச்சி கொண்டு மருதுவாணரைத் துதித்தான்.

''நிராமய! பரமானந்த! நிருத்த நான் மாடக்
கூடல்
பராபர! இமையா முக்கட் பகவ! பார்வதி
மணாள!
புராதன அகிலநாத புண்ணிய மருதவாண!
அராவணிச் சடையா என்றென்று
அளவிலாத்துதிகள்செய்தான்''

இதுகேட்ட இறைவன், 'பாண்டிய! கீழ்கோபுரத்தில் பிரம்மகத்தி நிற்கின்றது. ஆகையால் மேல் கோபுரம் வழியாகப் போய்விடு'' என்று கூற, பாண்டியன் மேல் கோபுரம் வழியே வெளியேறி பிரம்மகத்தி நீங்கினான். பிறகு அம்மேல் கோபுரத்தைப் புதுக்கிக்கட்டினான். அது இன்று ''பாண்டியன் கோபுரம்'' என்ற பெயரால் விளங்குகிறது.

பாண்டியன் மேல கோபுரம் கட்டும்போது திருவிடைமருதூரில் ஆலயது அன்பின் திறம் எவ்வாறிருந்தது என்பதைத் திருவிடைமருதூர்ப் புராணமும், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை என்ற நூலும் அழகாக விளக்குகின்றன.



பட்டினத்தடிகள் சிவபெருமானுடைய அடியார்கள் யார் யார் என்று ஒரு பாடல் பாடியருளினார். இமையா நெடுங்கண் உமையாள் நங்கை (பார்வதி), மழைக் கட்கடத்துப் புழைக்கைப் பிள்ளை (விநாயகர்), அமரர்த் தாங்கும் குமரவேள் (முருகன்), கரிசங்கு ஏந்திய (திருநெடுமால்), வரன்முறை படைத்தொரு நான்முகத் தொருவனும் (பிரமன்), தாருகர்ச் செற்ற வீரக்கன்னி (துர்க்கை), நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும் (மலைமகளும்) திருமகளும்) பீடுயர் தோற்றத்துக்கோடி உருத்திரரும் (ருத்ரகோடிகள்), மானாப் பெருந் திறல் வானோர் தலைவனும் (இந்திரன்) செயிர்தீர் நாற்கோட்டு ஐராவதமும் (வெள்ளையானையும்), வாம்பரியருக்கர் தாம் பல்:னிருவரும் (பன்னிரண்டு சூரியர்களும்), சந்திரன் ஒருவனும்; செந்தீக் கடவுளும் (சந்திரன், அக்னி) நிருதியும் சமனும் சுருதிகள் நான்கும் (நிருதி எனும் திக்பாலகன், யமன், நால்வேதங்களும்) வருணனும், வாயுவும், இருநிதிக் கிழவனும் (குபேரனும்), அட்ட நாகங்களும் எட்டுவசுக்களும் (திக்குகள்லுள்ள எட்டு யானைகளும், அஷ்ட வசுக்களும்), மூன்றுகோடி ஆன்றமுனிவரும் (மூன்று கோடி மகரிஷிகளும்) வசிட்டனும், அகத்தியனும், கபிலன், தும்புரு, நாரதன என்றிருதாத்ரரும், வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும் (அப்டர்-சுந்தரர்-சம்பந்தர்), திருந்திய அன்பில் பெருந்துறைப் பிள்ளையுப (மாணிக்கவாசகர்) அத்தரு செல்வம் அவமதித்தருளிய சித்தமார் சிவாக்ய தேவரும்) என்றெல்லாம் தேவர்களுக்கு முனிவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு வரியில் பாடிய பட்டினத்தார், வரகுணபாண்டியனது செய்கையை வியந்து இருபத்திரண்டு வரிகளில் கூறினார்.

நெற்றியில் திருநீறிட்டு கொண்டு, திருட வந்த ஒருவனை கொண்டு வந்தபோது ''திருநீறிட்டவர் திருட மாட்டார்'' எனக்கூறி திருடன் கையிலிருந்த கட்டை அவிழ்த்தான் பாண்டியன். நரிகள் 'ஓ' என ஊளை இடுவதை, சம்போ என அழைப்பதாக எண்ணி மகிழ்ந்து, அவைகளுக்குக் குளிர் ஏற்படாத வண்ணம் போர்வைகள் போர்த்தினான். தண்ணீரில் தவளைகள் கத்த ''கரகர'' என்ற ஒலி ''ஹர ஹர'' என இறைவன் நாமமாக அவன் காதில் விழ, காசும் பொன்னும் கலந்து சிவனடியாருக்குச் சனமானம் எகுத் தண்ணீரில் தூவினான்

சிவன் கோயிலில் உலர்த்தியிருந்த எள்ளில் ஒருவன் ஒரு பிடி எடுத்து உண்டு 'எள்ளை எவர் வீட்டில் தின்றாலும் அவர் வீட்டில் மாடாகப் பிறந்து உழைக்கவேணும் என்ற நியதி தெரிந்து அடுத்த பிறவியில் மாடாகப் பிறந்து சிவபெருமானுக்குச் (சேவை செய்ய விரும்பியே தின்றேன்'' என்ன, அவனது வாயிலிருந்து பாதி எள்ளைத் தனது வாயிலிடச் சொல்லி ''நானும் ஒரு மாடாகப் பிறந்து சேவை செய்வேன். எண்ணைச் செக்கிற்கு இரண்டு மாடுகள் தேவையல்லவா?'' என்றனன் வரகுண பாண்டியன்.

கோயில் பிரகாரத்தில் நாய் கழித்த மலத்தைத் தன் கையில் எடுத்துச் சுத்தி செய்தான்.

திருவிடைமருதூர் பிரகாரத்தில் ஒரு மனிதனின் தலைகிடக்க ''என்ன பாக்யம்! உம் தலைபோல் எம் தலையும் இங்கே கிடக்க வேணும்'' என வேண்டினான்.

வேப்ப மரத்திலிருந்து கீழே உதிர்ந்த வேப்பம் பழங்கள் மண்ணில் பாதி புதைந்து மேலே பாதி தெரிய, வரகுண பாண்டியனுடைய கண்களுக்கு அவை சிவலிங்கங்களாகத் தெரிய அவைகளுக்கு மேல் விதானமாகத் திரைகளை யமைத்தான்.

சோழ மன்னனின் புதல்வியை மணந்து கொண்ட பாண்டியன் பேரழகியான அவள் இறைவனுக்கே தகுதியானவள் என எண்ணி, திருவிடை மருதூர் கோயிலுக்குள்ளே இரவில் அவளைக் கொண்டு விட்டுவிட்டான். பொழுது விடிந்ததும் மகாலிங்கப் பெருமானின் லிங்க உருவத்திற்கு மேலாக ஒரு பெண்ணின் கை தெரிந்தது. பாண்டியன் பதறி 'பெருமானே! அப்பெண் பரிசுத்தமானவள் என ஏற்றுக் கொண்டாயா? அவள் கை இந்தப் பாவியினால் தீண்டப் பெற்றது என வெளியில் தள்ளிவிட்டாயா?'' என அலற ''பாண்டிய! உலகம் உன் பக்தியை அறிந்து கொள்ளுவதற்காகவே இந்த கையைக் காட்டினோம் கவலையுறாதே'' எனக் கையை இழுத்துக் கொண்டார்.

இவ்வளவும கூறிய பட்டினத்தார் 'இவ்வளவு அன்பர் இருக்க யானும் ஒரு அன்பனா? எனத் தன்னை வெறுத்துப் பேசுகிறார்.

''வெள்ளைநீறு மெய்யிற்கண்டு
கள்ளன்கையில் கட்ட விழ்ப்பித்தும்
ஓடும் பல் நரி ஊளை கேட்டு அரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில்தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத்தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன் இப்பிறப்புக்கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருதவட்டத்து ஒரு தனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்மித்தலையும்
கிடத்தல் வேண்டுமென்று அடுத்தடுத்திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன வென்று நாய்க் கட்டமெடுத்தும்
காம்புகுதது திர்ந்த கனியுருக் கண்டு
வேம்பினுக்கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற்கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

— திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

இப்படிப்பட்ட உத்தம பக்தனான வரகுண பாண்டியன் மதுரை திரும்பி இறைவனை வணங்கி வாழ்ந்த காலத்தில் சிவபுராணங்களை கேட்டு, சிவலோகத்தைக் காண வேண்டுமென்று ஆவல் கொண்டு மீனாட்சி சுந்தரேசரின் ஆலயத்தை அடைந்து, இறைவனிடம் தனது மனக்குறையைத் தெரிவிக்க, அடியார்க்கு எளியனான அங்கயற்கண்ணி நாயகன் மதுரையிலேயே பாண்டியனுக்குச் சிவலோகத்தைக் காட்ட திருவுள்ளங்கொள்ள, சிவலோகம் மதுரைக்கே வந்தது. சிவபெருமான் நந்திகேசுவரை அழைத்து, சிவலோகக் காட்சிகளை வரகுணனுக்குக் காட்டுமாறு கட்டளையிட்டனர். சிவபெருமானின் கட்டளையைச் சிரமேற் கொண்ட நந்திகேசுவரர், அழகிய குளங்களும், மண்டபங்களும், எங்கும் இனிய இசை நிறைந்த தேவர்களின் இருப்பிடங்களைக் காட்டினார். ''இது பிரமனின் இருப்பிடம். இது திருமாலின் இருப்பிடம். இது துக்குப் பாலகர்களின் உறையுள. இது விடியற்காலையில் நீராடி, வெண்ணீராடி, கோயிலில் அலகிட்டு, நந்தவனப் பணி புரிந்து, திருமாலைகள், தூபதீபம், காட்டி சிவத்தோத்திரம் செய்து சிவகதை கேட்ட சிவசாலோக பதத்தில் வாழும் பெரியவர்கள், சிவ பூசை பதினாறு உபசாரங்களுடன் செய்து பூசித்தவர் வாழும் சிவசாமீபப்பதம் இது. மூலாதாரத்திலிருந்து குண்டலினிசக்தியை எழுப்பி சிவசாரூபம் பெற்றவர் வாழுமிடம் இது. இவர்கள் யாகம் செய்த அந்தணர்கள், இவர்கள் தண்ணீர்ப்பந்தல் வைத்துத் தருமம் செய்தவர்கள். இவர்கள் சிவனடியார்களைச் சிவ பெருமானாகவே எண்ணிப் பூசித்தவர்கள். இவர்கள் மதுரை நாயகனான சிவபெருமானுக்குத் திருப்பணி செய்த உன் முன்னோர்கள்' என்றெல்லாம் காட்டி, அழகிய நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட சிம்மாதனத்தில், விநாயகர், முருகன் மற்றும் சிவகணங்கள், சிவ பக்தர்களால் சூழப்பட்டு அபமையுடன் சிவபெருமான் வீற்றிருக்கும் அழகான காட்சியைக் காட்டினார் நந்திதேவர். அளவிட முடியாத மகிழ்ச்சியால் வாய்குழற, உடல் நடுங்க, ரோமங்கள் குத்திட்டு நிற்க, சிவானந்தம் பெற்றான் வரகுண பாண்டியன்.

''உரைகளும் தடுமாற மெய்ரோமமும் சிலிர்ப்ப
கரையிறந்த இன்னருட் பெருங்கடலில்
அன்பென்னும்
திரையிறந்த ஆறுஊர்த்திட மிகுந்து போய்ச்
செப்பின்
வறையிறந்த ஆனந்த ஆரமுதைவாய் மடுத்தான்''

அந்நிலையில் சிவலோகம் மதுரையாக மாறியது. பாண்டியன் சோமசுந்தரப் பெருமானை தரிசித்து அளவில்லா மகிழ்ச்சி கொண்டு 'நாய் போன்ற அடியேனது பழியை நீக்கிய தாய் போன்ற தெய்வநாயக! சிவலோகம் காட்டி அதையே மதுரையாக மாற்றிய பெருமானே! ''பிறவியில்லாது என்னைக் காத்த பேருளா! என் பழியை நீக்கி என் குலத்திற்கே களங்கம் வராது காப்பாற்றிய கருணாகர! அன்புறுவானவருக்குச் சிவலோகம் உண்டு எனஎனக்குக் காட்டிய பெருமானே'' என்று உருகித் துதித்தான்.

''வெங்கட் பழியின் வினையேனை வேறாக்கித்
திங்கட்குலக் களங்கம் தீர்த்தாய் நின்தாள்
சரணம்
அங்கட்சிவபுரம் உண்டு அன்புடை யார்க்கு
என்பதை இன்று
எங்கட்குக்காட்டி இசைவித்தாய் தாள்சரணம்''

இவ்வாறெல்லாம் இறைவனை உருகிப் பணிந்து நல்ல முறையில் நாட்டை ஆண்டு வந்தான் வரகுண பாண்டியன்.

—(தொடரும்)

# கீதைக் குறள்கள்



அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

### (விசுவரூப தரிசன யோகம்)

(11) இறைவனின் பேருருவக் காட்சி

(குறிப்பு:—அருச்சுனனின் வேண்டுகோள் :

''பரந்தாமா! கருணையுடன் நீ விளக்கிய ஆன்மதத்துவத்தால் என் மயக்கம் தெளிந்தது உயிரினங்களின் பிறப்பு இறப்புக்களை அறிந்தேன், உன் பெருமையையும் செவிமடுத்தேன். உன் பேருருவைக் காணவிரும்புகிறேன். அதனை என்னால் பார்க்க இயலுமாயின் இறைவா! அழிவற்ற அவ்வுருவைக் காட்டியருள்வீராக!'') (11[1— 4)

1. பார்த்தா எனதுருவின் பற்பல பேதங்கள்
பார்த்திடுவாய் இப்பொழுதே இங்கு. (11[5)

ஆதித்தர் ருத்திரர் அச்வினிகள் டல்வசுக்கள்
ஆதி மருத்துக்கள் காண். (11[6)

தங்கும் சராசரங்கள் என்னுளே; இவ்வுருவில்
தங்காத எப்பொருளும் இல். (11[7)

ஊனக்கண் பார்க்க உதவா; அருள்கிறேன்
ஞானக்கண் பார்த்திடு நன்று. (11[8)

(குறிப்பு :—
சஞ்சயன், வியாசருடைய அருளால் பெற்ற ஞானக்கண்களால் போர்க்களத்தில் நடைபெறும் காட்சிகளைக் கண்டும் கேட்டும் பார்வை இழந்த திருதராட்டினனுக்குக் கூறுகிறான்.)

''கண்ணபிரான் தன் தெய்வீக உருவத்தைப் பார்த்திபனுக்குக் காட்டுகிறார். அவ்வுருவில் பலவாய்களும் கண்களும் இருக்கின்றன; ஆடை ஆபரணங்களும் மலர் மாலைகளும் அணிந்துள்ளது. வாசனைப் பூச்சுக்களும் பூசியுள்ளன. முகங்கள் எல்லா திசையுளுமுள்ளன. ஆயிரம் சூரியன்களுக்கு ஒப்பான ஒளியுடையதாகவும் தோன்றுகிறது. அனைத்து உலகங்களும் அதனுள் காணப்படுகின்றன. அவ்வுருவைக் கண்டு அருச்சுனன் மெய் சிலிர்த்துப் பகவானை வணங்கிக் கூறுகிறான்.'' ((11[9-14)

(தான்கண்ட பேருருவை அருச்சுனன் வருணிக்கின்றான்:)

5. தேவர்பிர் மன்முனிவோர் சேர்ந்த உயிரினம்
தேவசர்ப்பங் கள்காண்கி றேன். (11[15)

வாய்கள் வயிறுகள் கைமுகங்கள் திக்கெலாம்
வாய்த்திடக் காண்கிறேன் நான். (11[16)

பொன்முடி சக்கரம் பொங்கும் ஒளியுடன்
வன்கதையும் காண்கிறேன் நான். (11[17)

அறியத் தகுந்தோன்; அழிவிலான் என்றும்;
அறிகிறேன் மெய்ப்பொருள்நீ என்று. (11[18)

இவ்வுலகு உன்னிடத்தில் என்றுமுள; மாற்றமின்றி
ஒவ்வும் தருமம்காப் பாய். ( ,,)

10. உன்சக்தி எத்திசையும் உள்ளதைக் காண்கிறேன்;
உன்ஆதி ஈறுகண்டி லேன். (11[19)

திங்களும் ஞாயிறும் சீரியவுன் கண்களே
எங்கும்உன் செங்கரங் கள். ( ,,)

வெந்தழல் உன் வாயாம்; வெப்பமிகு உன்னொளி
வெந்தெரிக்கும் அண்டமெ லாம். ( ,, )

விண்பண் வெளியெலாம் அச்சுறுத்தி நிற்குமுனைக
கண்டுலகு அஞ்சிநடுங் கும். (11[20)

உன்னுள் புகும்வான வர்களும் ஒல்குற்று
நின்றுசிலர் போற்றுகின் றார். (11[21)

15. மங்கல வாழ்த்தை மனமுருகிப் பாடுகின்றார்
எங்கும்சித் தர்முனி வோர். ( ,,)

உருத்திரர் ஆதித்தி யர்முதலாம் உம்பர்கள்
டெருவியப்பில் மூழ்கின்ற னர். (11[22)

உடலுறுப்புப் பற்பல உள்ளவுனைக் காணின்
குடல்நடுங்கும் யாவர்க்கும் மற்று. (11[23)

வானகத்தில் வண்ணம் பலவாய்க் காண்கிறேன்;
கானல்வீ சும்திறந்த வாய், (11[24)

கண்களைக் கண்டவுடன் என்அமைதி வீரமெலாம்
சுண்டி மறைந்தன வே! ( ,, )

20. பெரியவாய் பற்களும் பேரூழித் தீயோ!
தெரிந்திலேன் எத்திசை யும். (11[25)

# மார்கழி நீராடேலோர் எம்பாவாய்



டாக்டர் த. அமிர்தலிங்கம்

''மாதங்களில் நான் மார்கழியாகத் திகழ்கிறேன்'' என்பது கண்ணபெருமான் பகவத் கீதையில் அருளியிருக்கும் திருவாக்காகும். தேவர்களுக்கு விடியற்காலையாகிய இந்த மார்கழியில் நோன்பு இரண்டு முக்கிய பலன்களை நமக்கு நல்கும். முதல் பலனாக நாட்டிற்கு நல்ல மழைபொழியும். இரண்டாவது பலனாக நோன்பிருப்பார்க்கு நல்ல வாழ்க்கைத் துணை கிட்டும்.

இந்த மார்கழி மாதம் வந்துவிட்டால் கன்னிப் பெண்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். மாதம் முழுவதும் பாவை நோன்பிருந்து அடுத்துப் பிறக்கும் தையில் தங்கள் வாழ்விற்கு வழி பிறக்க வேண்டும் என்பதாக அவர்கள் இறைவனை வணங்கி வேண்டுவார்கள்.


கன்னிப் பெண்கள் குதுகலமாக இவ்வாறு மார்கழி நோன்பிருப்பதை மாணிக்கவாசக சுவாமிகளும், ஆண்டாளும், திருவெம்பாவையாகவும் திருப்பாவையாகவும் வடித்திருக்கிறார்கள். நாம் மாணிக்கவாசகரின் திருவெம்பாவையிலிருந்து மார்கழி நோன்பின் மகத்துவத்தைக் காண்போமாக.

ஒரு தெருவில் இருக்கும் அத்தனைக் கன்னிப் பெண்களுமாகச் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுவிடுகிறார்கள். யார் முதலில் விழித்தாலும், மற்றவர்களையும் விழிக்கச் செய்து, அவர்களையும் அழைத்துக் கொண்டு, எலலோருமாக ஒருசேரப் போய் ஆலயத்திருக்குளத்தில் நீராடிப் பின் சிவ பெருமானைத் தொழ வேண்டும். இதில் யாரும் தவறக்கூடாது என்பதுதான் அவர்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தின்படி முதலில் விழித்தெழும் கன்னிப் பெண்கள் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கும் தோழிப் பெண்களை எழுப்ப வருகிறார்கள். அவ்வாறு வருகிறபோதே அவர்கள் ஈசனின் புகழைப்பாடிக் கொண்டே வருகிறார்கள். ஈசன் புகழை வீதியின் கடைசியில் பாடக் கேட்டபோதும் ஒரு நங்கை மெய் மறந்து, பக்திப் பரவசமுற்றுப் படுக்கையிலே இருந்து புரண்டு கீழே விழுந்து ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என வாழ்த்தியபடி விழித்தெழுவது ஒரு வீட்டில் நடைபெறும் காட்சி, ஆனால் இன்னொரு வீட்டிலோ இதற்கும் நேர் மாறான கூத்து, அந்த நங்கை தன்னுடைய பாசமெல்லாம் ஈசன் மேல்தான் என்று வார்த்தைகளை அளந்திருக்கிறாளே தவிர, தோழிகள் போய் எழுப்பியும் அவள் எழாமல் படுக்கையின் மேல் பாசம் வைத்து, தூங்கியவாறே இருக்கிறாள். 'வாள் தடங்கண் மாதே வளருதியோ? வன் செவியோநின் செவிதான்'' ''பாசம் பரஞ்சோதிக்கென்பாய், இராப் பகல் நாம் பேசும்போது எப்போது இப்போதார் அமளிக்கே நேசமும் வைத்தனை?'' என்று தோழிகள் கேலி பேச, அதற்குப் பிறகே விழித்துக் கொள்ளும் அந்த நங்கை வெட்கத்திற்காளாகி, 'நாமெல்லாம் சிவபெருமானுடைய அடியார்கள், இப்படி கேலிகள் செய்யலாமோ?'' என்று நயம்பட வினவிப்பின் புறப்படுவதைக் காணுகின்றோம்.

இன்னொரு வீட்டில் இருக்கும் பெண் ஒருத்தி அவள் முதல்நாள் தன்னை வந்தெழுப்பிய தோழிகளிடம் ''நாளை உங்களுக்கு முன் விழித்தெழுந்து நான் வந்து பதிலுக்கு உங்களை எழுப்புவேன்'' என்பதாகக் கூறியிருந்தாளே ஒழிய அவ்வாறு செய்யவில்லை. அவளுடைய குற்றத்தையும் தோழிகள் சுட்டிக் காட்டிக் கேலி செய்யும்போது '' புதியதாக மார்கழி நோன்பை நோற்கத் தொடங்கியுள்ளவள் நாள், என குற்றத்தைப் பொறுத்து ஆட்கொள்ளக் கூடாதோ'' என்று அவளும் நயம்படப் பேசித்தோழிகளைச் சமாதானப்படுத்திப் பின் அக்கூட்டத்தில தானும் சேர்ந்து கொள்கிறாள், 'புத்தடியோம் புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ? எனவரும் திருவெம்பாவைத் தொடரால், சபரிமலைக்குச் செல்லும் கன்னிசாமிகளைப் போலவே, மார்கழி நோன்பினையும் ஆண்டுதோறும் புதிது புதிதாகத் தொடங்கும் கன்னிப் பெண்கள் இருந்திருப்பதைத் தெளிகிறோம்.

இன்னொரு வீட்டுப் பெண் தோழிகள் எழுப்பியும்கூட எழாமல, 'எல்லோரும் வந்தாயிற்றா? எல்லோரும் வந்து பிறகு விழிக்கிறேன் அதுவரை தூக்கத்தைக் கலைக்காதீர்கள்''



என்று வேண்டுவது ஒரு வேடிக்கைதான். விண்ணுக்கொரு மருந்தாக, வேத விழுப்பொருளாக, கண்ணுக்கினியானாக உள்ள இறைவனை நொடி நேரமும் வீணாக்காமல் தொழுவதைப் பேறாகக் கருதும் பெண்கள் ''எல்லோரும் வந்தார்களா என்று எண்ணிக்கொண்டிருப்பதும்கூட காலக் கேடுதான். அதைச செய்யமாட்டோம். நீ உடன் வந்தால் வா'' என்று கூற, அதற்குப் பிறகே கும்பகர்ணனின் தங்கையான அந்த நங்கை எழுந்து தோழிகளைத் தானும் பின்தொடருகிறாள்.

முன்னரவு, நடுஇரவு, தூக்கங்களை விடப் பின்னிரவு தூக்கம் எப்பொழுதும் சுகமாகத் தான் இருக்கும். அணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் எப்படித் தம்மைப் பக்கொண்டாரை எளிதில் விடாதோ அவ்வாறே உறக்கமும் கூட, எளிதில் தான் பற்றியோரை விடாது. ஆனால் அத்தகைய உறக்கத்திலிருந்தும், மாயையிலிருந்தும் நம்மை விடுவித்துக்கொள்ள நாம் பயிற்சி பெறும் மாதம் தான் இந்த மார்கழி மாதமாகும். ''என்னே துயிலின் பரிசு'' ஈதென்ன உறக்கமோ!'' என்று மணிவாசகரும் தூக்கத்தின் கொடுமையைக் கூறி, பக்திமார்க்கத்தால் துயில்களைய நம்மை அழைக்கிறார். மாயையாகிய தூக்கத்தில் ஆழ்ந்தவரைபோதும். இனியாவது இறைவனின் திருப்பாதம் பணியவேண்டும் என்ற தத்துவத்தை வலியுறுத்துவனவே திருவெம்பாவையிலுள்ள துயில் களையும் பாடல்கள்.

ஒரு வழியாக நித்திரை நீங்கி, மங்கையர் எல்லாம் ஒருசேரத் திரண்டாயிற்று. இனி நீராட அவர்கள் ஆலயத் தடாகத்திற்குச் செல்லுகிறார்கள். செல்லும் போதே தமக்கு என்ன வரம் ஈசன தர இருக்கிறான் என்பதை நினைத்தவர்களாய் மகிழ்ந்து,

''முன்னைப் பழம் பொருட்கும்
முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப்
பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம் கணவர்
ஆவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப்
பணி செய்வோம்
இன்ன வகையே
எமக்கெங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இலோம்
ஏலோர் எம்பாவாய்''

என்று பாடியவாறே செல்கிறார்கள். சிவன் மேல் பற்றுக்கொண்ட பக்தைக்குச் சிவன்

மேல் பற்றுக்கொண்ட பக்தனே மணமகன் ஆகவேண்டும். நெறிகொண்ட பக்தனே மணமகன் ஆகவேண்டும். நெறிவேறானால் சிந்தையும் வேறுபட்டு, வாழ்க்கைச் சாரமற்று போய்விடும். ஆகவே தான் சிவனடியாரே தமக்கு வாழ்க்கைத் துணையாக வேண்டும் எனக் குறிப்பிட்டு வரம் வேண்டுகின்றனர் அந்தப் பாவைகள்.

தமக்கு வாழ்க்கைத் துணையை வேண்டுவதோடு நின்று கொண்டுவிடவில்லை அப்பெண்கள். நாடு வாழ்ந்தால்தானே வீடும் வாழும். நாடு வாழ இன்றியமையாது மழையும் வேண்டும். மேகங்கள் அன்னை பார்வதியின் கருநிறம் கொண்டு திரண்டு, அன்னையின் இடையைப் போல மின்னலும் மின்னி, அன்னையின் பாதச் சிலம்புகளின் ஒலியைப் போல இடியும் ஒலிக்க, அவள் அன்பருக்காகச் சுரக்கும் அருளேபோல் மழை பொழிய வேண்டும் என்று கேட்டுக் கன்னிப் பெண்கள் மழையையும் வேண்டிப் பாடுவது, அவர்களின் சுயநலமில்லா கருணைக் குணத்தை நமக்கு உணர்த்தி மகிழ வைக்கிறது.

திருக்குளத்தில் பெண்கள் நீராடுகிறார்கள். திருக்குளமும் அவர்களுக்கு அர்த்தனாரீசுவரனின் வடிவமாகவே காட்சியளிக்கிறது. கருநிற குவளை மலர்களைத் தேவியாகவும், செந்நிறத் தாமரை மலர்களைச் சிவனாகவும் எண்ணி வணங்கியவாறே நீராடுகிறார்கள்.

''சீதப்புனலாடிச்
சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி
அப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடிச்
சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி
அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த
பெய்வளைதன்
பாதத்திறம்பாடி
யாடேலோர் எம்பாவாய்''

திருவெம்பாவையில் சிவபெருமானின் திருக்கருணை மிகப் பலவாறாகப் பாராட்டிப் பேசப்படுகிறது. அத்தன், ஆனந்தன், அமுதன் என்று நா அள்ளூறித்தித்திக்கத் தித்திக்க மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் செய்தருளிய இத்திருவெம்பாவையில் ஈசனின் அடியையும் முடியையும் திருமாலும் பிரமனும் தேடிகாணாமல் வாடிய அந்த வரலாறு மிகப் பல இடங்களில் பாராட்டிப் பேசப்பட்டுள்ளது.

''ஆதியும் அந்தமும்இல்லா
அருட்பெருஞ்சோதி''
''மாலறியா நான்முகனும் காணா மலை''
''பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவுப்
பாதமலர்
போதார் புனை முடியும் எல்லாப் பொருள்
முடிவே''


இப்படி ஈசனார் கொண்ட விசுவரூபம் திருவெம்பாவையில் விவரிக்கப்படுகிறது. திருமாலுக்கும், பிரமனுக்கும்தான் ஈசன் எட்டாதவனே தவிர அன்பர்களுக்குத் தானே வந்து வரம் அளிக்கும் வள்ளல், ''இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளி செங்கமலப் பொற்பாதம் தந்தருளும சேவகன்''. சேவகன் என்று ஈசனார் அருள் புரியும் திறத்தை அற்புதமாகப் பாடியிருக்கிறார் மாணிக்கவாசகர்.

இறைவனை அடைக்கலம் அடைந்துவிட்டால் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை. நான்முகன் கல்விச் செருக்கினால், தான் பெரியவன் என்று தருக்கி சிவபெருமானின் முடியைத் தேடினான். காணமுடியவில்லை. திருமாலும் செல்வச்செருக்கினால்தான் பெரியவன் என்று தருக்கி, அடியைத் தேடினான். ஈசன் அகப்படவில்லை. ஆனால் அன்பைத் துணை கொண்டு தேடும் அடியவர்க்கோ, தானே இல்லங்கள் தோறும் எழுந்தருளி அருள்சுரக்கின்றான்.

மும்மலங்களாகிய தூக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள வேண்டும். இறைவனின் அருளாகிய தடாகத்தில் அவன் புகழைப் பாடிப் பாடி நீராட வேண்டும். மார்கழி நோன்பும், மார்கழி நீராடலும இவ்விரண்டையும் வற்புறுத்துவதே. இவ்வாறு நீராடினால் பிறவித் துயர் கெடும். முத்தி பதம்கிட்டும். பேரின்பப் பெருவாழ்வில் நீடித்த சுகம் காணலாம். இறைவனே தலைவன். ஆண்களும் பெண்களுமாகிய மானிட உயிர்கள் அனைத்துமே தலைவனின் தண்ணளியை வேண்டிப் பாடும் பாவைகள். ஆகவே கன்னியர்க்கு பட்டுமே உரியதல்ல மார்கழி நோன்பு. நம் அனைவருக்குமே உரிய இந்நோன்பை நோற்று நாமும் மணிவாசகர் பிடித்தவாறு சிவனாரின் பாதங்களைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டு உய்வோமாக.

''போற்றி யருளுக நின்
ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின்
அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும்
தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும்
ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும்
காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்
கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர்
ஆடேலோர் எம்பாவாய்''

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



மயிலை அருள்மிகு மாதவப் பெருமாள் ஆலய மகாசம்ப்ரோட்சணம் 8.11.92 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு அழகு திருநாவுக்கரசு, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமிகு மதுசூதனன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திருமிகு ஆனந்தன், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமிகு ஜெய்குமார், மயிலை சட்டமன்ற உறுப்பினர் திருமிகு டி. எம். ரங்கராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




## மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் 1993 புத்தாண்டு நல்வாழ்த்து

மலர்கின்ற புத்தாண்டில் மனநிறைவையும், மகிழ்ச்சிப் பெருக்கையும் அடைய அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் நிலையான பெருமைகளைக் காப்பதோடு ஐந்த்ரை கோடி தமிழ் மக்களின் நலனைப் பேணிக் காப்பதையும், தனது உயரிய லட்சியங்களாக கொண்டு இயங்கி வரும் தமிழக அரசு இப்புத்தாண்டில் மேலும் பல புதிய திட்டங்களை வழங்கி தமிழகத்தின் அனைத்து துறைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து சாதனை சரித்திரம் படைக்கும்.

நம் அனைவரிடையேயும் ஒற்றுமை உணர்வை வளர்த்து நல்லிணக்கத்தினை உறுதிப்படுத்துகின்ற நல்லாண்டாகவும், நாம் வளர்ச்சி பாதையில் தொடர்ந்து வெற்றி நடைபோட வழிவகுக்கின்ற புத்தாண்டாகவும் 1993-ஆம் ஆண்டு அமைய வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

அன்பிற்குரிய தமிழக மக்களுக்கு எனது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.